# திசைகள்

PP19723/10/2022(035349)

THISAIGAL — வாய்மையின் வழிகாட்டி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ ஆண்டு ஆவணி மாதம் ஹிஜிரி 1447 முஹர்ரம்

• Weekly Edition - 31 August 2026 - FREE COPY •




## காட்டுக்குள் பிறந்த நகர்...

## பத்தாங் பெர்ஜுந்தையின் அதிரடிப் பயணம்

அடர்ந்த காடுகளும், யானைகளும், புலிகளும் சுற்றித் திரிந்த ஒரு பகுதி இன்று பரபரப்பான நகரமாக மாறியது எப்படி? தோட்டத் தொழிலாளர்களின் வியர்வையிலும் போராட்டத்திலும் உருவான பத்தாங் பெர்ஜுந்தை நகரின் மறைக்கப்பட்ட கதை – உள்பக்கத்தில்!




# “69 ஆண்டுகள்... இன்னும் இன அரசியலா?”

2026 ஆகஸ்ட் 31ஆம் தேதி மலேசியா தனது 69ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. தேசியக் கொடிகள் பறக்கும்; அணிவகுப்புகள் நடைபெறும்; தேசப்பற்று முழக்கங்கள் விண்ணை முட்டும். ஆனால், இந்தக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில் ஒரு கேள்வியை நாம் தவிர்க்க முடியாது. 69 ஆண்டுகால சுதந்திரத்திற்குப் பிறகும், மலேசிய அரசியல் இன்னும் இனம் மற்றும் மதத்தை மையமாகக் கொண்டே இயங்க வேண்டுமா?

விரிவான செய்தி உள்ளே...

## பில்லியன் டாலர் சொத்துக்கள்... யாருக்கு?





மறைந்த டான் ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணனின் பிரம்மாண்ட சொத்து சாம்ராஜ்யம் இப்போது யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது? அவரது வாரிசுகள் யார்? உலக வர்த்தகத்தில் செல்வாக்கு செலுத்திய தொழிலதிபரின் சொத்துக்களுக்குப் பின்னால் இருக்கும் குடும்பத்தின் ரகசிய பின்னணி என்ன?

விரிவான செய்தி உள்ளே...



## தென்சீனக் கடலின் இரும்பு மனிதர்கள்

கடலுக்கு நடுவே தனிமை, புயல், பேரலை, உயிர் ஆபத்து என சவால்களுக்கு மத்தியில் எண்ணெய் களங்களை இயக்கும் தொழிலாளர்கள்! வசதியான வாழ்க்கையைத் துறந்து, குடும்பத்தை விட்டு கடலின் நடுவே பணியாற்றும் இந்த மறைக்கப்பட்ட மனிதர்களின் போராட்ட வாழ்க்கை.



விரிவான செய்தி உள்ளே...

# தலையங்கம்

# மௌனம் காத்த மலேசிய ஏர்லைன்ஸ்:

## தார்மீகக் கடமையை மறந்த தேசியக் குறியீடு

இந்தோனேசியாவின் ஜகார்த்தா விமான நிலையத்தில் 25 கிலோ போதைப்பொருள் மாத்திரைகளுடன் மலேசிய ஏர்லைன்ஸ் விமானி ஒருவர் கைது செய்யப்பட்ட செய்தி, உலக அரங்கில் மலேசியாவிற்குப் பெரும் அதிர்ச்சியையும் தலைக்குனிவையும் ஏற்படுத்தியுள்ளது. ஒரு நாட்டின் தேசிய அடையாளமாகத் திகழும் விமான நிறுவனத்தின் முதன்மைப் பொறுப்பில் உள்ள ஒருவரே, அனைத்துலகப் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பில் சிக்கியிருப்பது எவராலும் எளிதில் கடந்து போக முடியாத ஒரு பேராபத்து.

குற்றம் சாட்டப்பட்ட 39 வயது துணை விமானி, கடந்த ஜூலை 28இல் இந்தோனேசியச் சுங்கத்துறையினரால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார். அவரது சாமான்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட எக்ஸ்டசி மாத்திரைகளின் அனைத்துலக மதிப்பு 13 மில்லியன் ரிங்கிட்டிற்கும் அதிகம் என அதிகாரிகள் அறிவித்த போது, உலகளாவிய ஊடகங்களின் ஒட்டுமொத்தப் பார்வையும் மலேசியாவின் வான்வழிப் பாதுகாப்பு நெறிமுறைகளின் பக்கம் திரும்பியது.

இந்த விவகாரத்தில் அதிர்ச்சியை விடவும், பொதுமக்களையும் பயணிகளையும் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது இந்தோனேசிய அதிகாரிகளின் ஆரம்பக் கட்ட அறிவிப்புதான். அந்த விமானி கோலாலம்பூரிலிருந்து ஜகார்த்தாவிற்குப் பயணிகளை ஏற்றி வந்த விமானத்தை இயக்கி முடித்த உடனேயே கைது செய்யப்பட்டார் என்ற செய்தி, வான்வழிப் பயணங்களின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பையே கேள்விக்குறியாக்கியது.

ஒரு விமானி போதைப்பொருள் உட்கொண்ட நிலையில், இவ்வளவு பெரிய கடத்தல் பொருளுடன் காக்பிட்டில் அமர்ந்து வந்துள்ளார் என்ற செய்தி காட்டுத் தீயாகப் பரவிய போது, உலகெங்கும் உள்ள வான்வழிப் பயணிகள் மத்தியில் சொல்லொணா அச்சமும், மலேசிய ஏர்லைன்ஸ் மீதான கடுமையான அதிருப்தியும் இயல்பாகவே உருவானது.

இத்தகைய கடும் நெருக்கடிச் சூழலில், ஒரு பொறுப்புள்ள நாட்டின் தேசிய மற்றும் அனைத்துலக விமான நிறுவனம் உடனடியாகச் செய்ய வேண்டிய முதற்பணி என்ன? உலகளவில் பரவி வரும் வதந்திகளுக்கும் அச்சத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து, உண்மையான நிலவரத்தை வெளிப்படையாக அறிவிப்பதுதான். ஆனால், மலேசிய ஏர்லைன்ஸ் நிர்வாகமோ அங்கேதான் தனது முதல் தார்மீகத் தவறை இழைத்தது.

அனைத்துலகச் சட்டங்கள், இருநாட்டுப் போலீசாரின் கூட்டுப் புலனாய்வு நடைமுறைகள் மற்றும் சட்டப்பூர்வ கட்டுப்பாடுகள் ஒருபுறம் இருக்கட்டும்; அவற்றை யாரும் மறுக்கவில்லை. ஆனால், ஒரு பயணிகள் சார்ந்த சேவை நிறுவனத்திற்கு, தன்னை நம்பிப் பயணிக்கும் பொதுமக்களுக்கு உண்மையை விளக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு சட்டங்களை விடவும் முதன்மையானது.

நெருக்கடி முற்றிய வேளையில், "விசாரணை நிலுவையில் உள்ளதால் பேச முடியாது" என்று மலேசிய ஏர்லைன்ஸ் காத்து வந்த மௌனம், உலக மக்கள் மத்தியில் "நிறுவனம் குற்றத்தை மறைக்க முயல்கிறதோ" என்ற தவறான கண்ணோட்டத்தையே வலுக்கச் செய்தது. ஒரு மூத்த பத்திரிகையாளனாக எனது 40 ஆண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் நான் வாதிடுவது என்னவென்றால், கார்ப்பரேட் உலகில் இத்தகைய மௌனம் என்பது நிர்வாகத்தின் பலவீனமாகவே பார்க்கப்படும்.

ஒரு குடும்பத்தின் உறுப்பினரால் அந்தக் குடும்பத்திற்குக் களங்கம் ஏற்படும் போது, குடும்பத் தலைவர் எப்படி முன்னின்று விளக்கம் அளிப்பாரோ, அதே போல ஒரு தேசிய நிறுவனத்தின் தலைமைக்குக் களங்கம் வரும் போது அதன் தலைவர் உடனடியாகப் பொதுவெளியில் தோன்றித் தன்னிலை விளக்கம் அளித்திருக்க வேண்டும். பிராண்டின் நற்பெயரைக் காப்பதும், உண்மையாக உழைக்கும் இதர 1,200-க்கும் மேற்பட்ட விமானிகளின் கௌரவத்தைக் காப்பதும் தலைமையின் கடமையல்லவா?

"சம்பந்தப்பட்ட நபர் அன்று பணியில் இருந்தாரா இல்லையா?" என்ற ஒரு எளிய, வெளிப்படையான கேள்வியைத் தீர்க்க, நிறுவனத்தின் 'டியூட்டி ரோஸ்டர்' (Duty Roster) பதிவுகளைச் சரிபார்க்க சில நிமிடங்கள் மட்டுமே போதுமானது. இந்தத் தரவை வெளியிடுவதால் எந்தவோர் அனைத்துலகப் புலனாய்வும் பாதிக்கப்படப் போவதில்லை என்ற போதிலும், அதனை உடனடியாகச் செய்யத் தவறியது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

அந்த விமானி அதிகாரப்பூர்வமாக விடுப்பில் இருந்த போதிலும், தனது சீருடையையும், 'குரூ லேன்' (Crew Lane) எனப்படும் ஊழியர்களுக்கான பிரத்தியேக விரைவுப் பாதையையும் பயன்படுத்திப் பாதுகாப்பு வளையங்களை ஏமாற்றியுள்ளார் என்பது உண்மைதான். ஆனால், இந்த விபரங்களை ஆரம்பத்திலேயே மலேசிய ஏர்லைன்ஸ் துல்லியமாக விளக்கியிருந்தால், உலக அளவில் அந்த நிறுவனத்தின் மீது படிந்த தவறான பிம்பம் முதல் சில மணி நேரங்களிலேயே விலகியிருக்கும்.

அதை விடுத்து, செய்தி உலகமெங்கும் பரவி, நிறுவனத்தின் பங்குகள் மற்றும் நற்பெயருக்குப் பெரும் சேதம் விளைவிக்கப்பட்ட பின்னர், ஒரு வாரம் கழித்து மலேசிய ஏர்லைன்ஸ் (MAG) "அவர் பணியில் இல்லை, பார்வையாளராகவே காக்பிட்டில் அமர்ந்திருந்தார்" என்று விளக்கம் அளிப்பது 'கண்ணைக் கெடுத்த பிறகு சூரிய நமஸ்காரம்' செய்வதற்கு ஒப்பானது.

இப்போது, தனது அனைத்து 1,260 விமானிகளுக்கும் ஆகஸ்ட் 15-க்குள் கட்டாய போதைப்பொருள் பரிசோதனை செய்ய உத்தரவிட்டு, தவறினால் பணி இடைநீக்கம் என்று மலேசிய ஏர்லைன்ஸ் அதிரடி காட்டுவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், இது நடந்த தவறை மறைப்பதற்கான ஒரு தற்காப்பு நடவடிக்கையே (Damage Control) தவிர, இழந்த நற்பெயரை உடனடியாக மீட்டுத் தந்து விடாது.

என் போன்ற மூத்த பத்திரிகையாளர்கள் இத்தகைய நிர்வாகத் தவறுகளைக் கண்டு மௌனமாகி விட்டால், சமூகத்தில் சொல்ல வேண்டிய நியாயப்பூர்வமான வாதங்களும், கேட்கப்பட வேண்டிய கூர்மையான கேள்விகளும் காலப்போக்கில் காணடிக்கப்பட்டுவிடும். ஊடகங்களின் கடமை என்பது வெறும் செய்திகளைச் சொல்வது மட்டுமல்ல; அதிகாரத்தில் இருப்பவர்களின் தார்மீகப் பொறுப்பைத் தட்டியெழுப்புவதும் ஆகும்.

இறுதியாக, உலகெங்கும் செய்தி பரவி ஓய்ந்த பிறகு, மிகத் தாமதமாகத் தனது விளக்கத்தை மலேசிய ஏர்லைன்ஸ் வெளியிட்டிருப்பது அதன் நிர்வாகத் திறமையின்மையையும், முடிவெடுப்பதில் உள்ள பலவீனத்தையுமே அப்பட்டமாகக் காட்டுகிறது. இனியாவது, தேசிய விமான நிறுவனம் சட்டப்பூர்வ சாக்குப்போக்குகளுக்குப் பின்னால் ஒளியாமல், வெளிப்படைத்தன்மையுடனும், தார்மீகப் பொறுப்புடனும் செயல்படப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதே நம் போன்றவர்களின் எதிர்பார்ப்பு.

இ.எம்.சாமி,
ஆசிரியர், திசைகள்.

# 69 ஆண்டுகளின் சுதந்திரம்

## இன்னும் எத்தனை காலம்

# இனமும் மதமும் அரசியலின் ஆயுதமாகும்?



**வரும் ஆகஸ்ட் 31ஆம் தேதி மலேசியா தனது 69ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. தேசியக் கொடிகள் பறக்கும்; அணிவகுப்புகள் நடைபெறும்; தேசப்பற்று முழக்கங்கள் விண்ணை முட்டும். ஆனால், இந்தக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில் ஒரு கேள்வியை நாம் தவிர்க்க முடியாது - 69 ஆண்டுகால சுதந்திரத்திற்குப் பிறகும், மலேசிய அரசியல் இன்னும் இனம் மற்றும் மதத்தை மையமாகக் கொண்டே இயங்க வேண்டுமா?**

சுதந்திரம் என்பது வெறும் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டதற்கான பெயரல்ல. ஒரு நாடு உண்மையான சுதந்திரத்தை அடைந்து விட்டதாகக் கூற வேண்டுமென்றால், அதன் மக்கள் பயமின்றி சிந்திக்கவும், இன அடையாளங்களைக் கடந்து ஒன்றிணையவும், கருத்துகளின் அடிப்படையில் அரசியலைத் தேர்ந்தெடுக்கவும் முடிந்திருக்க வேண்டும்.

ஆனால், மலேசிய அரசியலில் இன்னமும் இனம் ஓர் ஓட்டு வங்கி; மதம் ஓர் அரசியல் கவசம்; அடையாளங்கள் தேர்தல் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் வாழ்க்கைச் செலவு, கல்வி, வேலை வாய்ப்பு, ஊழல், வீடமைப்பு, பொருளாதார வாய்ப்புகள் போன்ற உண்மையான பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, உணர்ச்சிகளைத் தூண்டும் அரசியல் மீண்டும் மீண்டும் முன்னிலைக்குக் கொண்டு வரப்படுகிறது.

இது மலேசிய அரசியலின் இயல்பான பிறவிக் குணம் அல்ல என்பதை நமது வரலாறே காட்டுகிறது. ஒரு காலத்தில், இந்த நாட்டில் அரசியல் என்பது வெறும் மலாய்க்காரர், சீனர், இந்தியர் என்ற அடையாளங்களைச் சுற்றி மட்டும் சுழலவில்லை. பல்வேறு கருத்துகள், சமூக நீதி, தொழிலாளர் உரிமைகள், சீர்திருத்தங்கள் மற்றும் நாட்டின் எதிர்காலம் பற்றிய விவாதங்களே அரசியல் களத்தை உயிர்ப்புடன் வைத்திருந்தன.

அந்தக் கால அரசியலில், மறைந்த டான் சீ கூன் போன்ற தலைவர்கள் முக்கியமான உதாரணமாகத் திகழ்ந்தனர். மருத்துவராக இருந்த அவர், மக்களுக்காக அஞ்சாமல் குரல் கொடுத்தார். இன அடையாளத்தைத் தாண்டி, கருத்துகளையும் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் சாத்தியம் என்பதை அவரது அரசியல் பயணம் நிரூபித்தது.



பின்னர் அவர் பல்லின மக்களை உண்மையாக இணைக்கும் ஓர் அரசியல் தளத்தை உருவாக்க வேண்டும் என்ற கனவிலும் பங்காற்றினார். அது ஒரு முக்கியமான செய்தியை நமக்கு நினைவூட்டுகிறது – மலேசியாவில் பல்லின அரசியல் என்பது ஒரு கனவு மட்டுமல்ல; அது ஏற்கனவே இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் வாழ்ந்த ஒரு சாத்தியம்.





ஆனால், காலப்போக்கில் அரசியல் களம் மாறியது. கருத்துகளின் மோதலை விட இன அடையாளங்களின் மோதல் அதிகரித்தது. நாட்டின் எதிர்காலம் பற்றிய விவாதங்களை விட, ''யார் யாருக்காக பேசுகிறார்கள்?'' என்ற கேள்வி அரசியலை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. அந்த மாற்றத்தின் விளைவுகளை நாம் இன்று வரை அனுபவித்து வருகிறோம்.

இன உணர்வுகளைத் தூண்டுவது எளிது. மத உணர்வுகளை அரசியல் மேடையில் பயன்படுத்துவது அதை விட எளிது. ஆனால், அவ்வாறு பெறப்படும் அரசியல் வெற்றி ஒரு நாட்டின் நீண்டகால வெற்றியாக மாறுமா? சில நிமிடக் கைதட்டலுக்காக, பல தலைமுறைகளின் எதிர்காலத்தைப் பிளவுபடுத்துவது எந்த அரசியல் அறிவு?

மதம் மனிதனை உயர்த்துவதற்கானது; மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பதற்கானது அல்ல. இனம் ஒரு மனிதனின் அடையாளம்; அது மற்றவரை எதிரியாகக் காட்டுவதற்கான ஆயுதம் அல்ல. ஆனால், இந்த இரண்டையும் அரசியல் லாபத்திற்காக பயன்படுத்தும்போது, பாதிக்கப்படுவது அரசியல்வாதிகள் அல்ல ஶ்ரீ அடுத்த தலைமுறை மலேசியர்கள்தான்.

இன்று நமது இளைஞர்கள் ஒரு புதிய உலகத்தை நோக்கிச் செல்கின்றனர். செயற்கை நுண்ணறிவு, புதிய பொருளாதாரம், உலகளாவிய போட்டி, தொழில்நுட்பப் புரட்சி என உலகம் வேகமாக முன்னேறுகிறது. அந்த நேரத்தில், நாம் இன்னமும் இனத்தையும் மதத்தையும் வைத்து மக்களை வரிசைப்படுத்திக் கொண்டிருந்தால், உலகம் முன்னேறும்போது மலேசியா மட்டும் பழைய அரசியல் சுவர்களுக்குள் சிக்கிக் கொள்ளும் அபாயம் இல்லையா?

69 ஆண்டுகளுக்குப் பின்னர் நாம் அரசியல்வாதிகளிடம் கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி இதுதான்: நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்லப் போகிறீர்களா, அல்லது இனமும் மதமும் என்ற பழைய அரசியல் சக்கரத்தில் மீண்டும் மீண்டும் சுழற்றப் போகிறீர்களா? இனத்தைப் பாதுகாப்பதாகக் கூறி மக்களைப் பிரிப்பதும், மதத்தைப் பாதுகாப்பதாகக் கூறி பயத்தை விதைப்பதும், நாட்டை வலுப்படுத்தாது. உண்மையான வலிமை, வேறுபாடுகளுடன் வாழும் மக்களை ஒன்றிணைப்பதில்தான் உள்ளது.

இந்த 69ஆவது தேசிய தினத்தில் நாம் கொடியை மட்டும் ஏற்றாமல், நமது அரசியல் சிந்தனையையும் உயர்த்த வேண்டிய நேரம் வந்து விட்டது. மலேசியாவின் அடுத்த அத்தியாயம் இனத்தால் எழுதப்பட வேண்டுமா, மதத்தின் பெயரில் எழுதப்பட வேண்டுமா, அல்லது அனைத்து மலேசியர்களின் பொதுவான எதிர்காலத்தால் எழுதப்பட வேண்டுமா? இந்தக் கேள்விக்கான பதிலை அரசியல்வாதிகள் மட்டும் அளிக்க முடியாது. மக்கள் அளிக்க வேண்டும். ஏனெனில், சுதந்திரம் என்பது நாம் பெற்ற வரலாறு; ஆனால் ஒற்றுமை என்பது நாம் இன்னும் கட்டியெழுப்ப வேண்டிய எதிர்காலம்.

காலனித்துவ வரலாற்றின் சுவடுகளையும், உழைக்கும் வர்க்கத்தின் வியர்வைத் துளிகளையும் தன் மண்ணில் புதைத்து வைத்திருக்கும் கோலா சிலாங்கூரின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பகுதிதான் பத்தாங் பெர்சுந்தை. இன்று நவீனமயமாக்கலின் போர்வையில் பெஸ்தாரி ஜெயா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, தன் பழைய அடையாளத்தை இழந்து கொண்டிருக்கும் இந்த நகரம், ஒரு காலத்தில் மலேசிய இந்தியப் பாட்டாளிகளின் வாழ்வியலோடும் குருதியோடும் பிணைக்கப்பட்டிருந்த ஒரு வரலாற்றுப் பேழையாகும்.



# மறைக்கப்பட்ட முகவரி: பத்தாங் பெர்சுந்தையும் பாட்டாளிகளின் குருதியும்




பத்தாங் பெர்சுந்தைச் சுற்றிலும் பச்சைப் பசேலெனக் காட்சியளித்த ரப்பர் மற்றும் செம்பனைத் தோட்டங்கள் வெறும் மரங்களின் கூட்டமல்ல; அவை ஆயிரக்கணக்கான இந்தியக் குடும்பங்களின் வாழ்வாதாரக் கோட்டைகள். இப்பகுதியில் அமைந்திருந்த முக்கியத் தோட்டங்கள்:

- புக்கிட் பாடோங்
- சுங்கை ரம்பை தோட்டம்
- தென்னமரம் தோட்டம்
- சுங்கை திங்கி தோட்டம்
- மின்யாக் தோட்டம்
- மேரி தோட்டம்
- நைகல் கார்டனர் தோட்டம்

இந்தத் தோட்டங்கள் அனைத்தையும் அன்றைய காலகட்டத்தில் சொக்பின் என்ற பிரெஞ்சு நிறுவனம் நிர்வகித்து வந்தது.



அதிகாலையில் பனிமூட்டத்திற்கு நடுவே, கையில் ஏந்திய அரிக்கேன் விளக்குடனும் ரப்பர் வெட்டும் கத்திகளுடனும் புறப்படும் இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பில்தான் இந்தத் தோட்டங்கள் செழித்து வளர்ந்தன.

அமைதி தவழும் இந்தத் தோட்டங்களின் பின்னணியில்தான் மலேசிய இந்தியர்களின் ஆரம்பகால சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அடித்தளம் வித்திடப்பட்டது. லயன் குடியிருப்புகள், தோட்டத்துத் தமிழ்ப் பள்ளிகள் மற்றும் ஆலயங்கள் என இவர்களின் உலகம் இந்தத் தோட்டங்களுக்குள்ளேயே சுருங்கியிருந்தது.

ஆனால், இந்த அமைதிக்குப் பின்னால் கணக்கிலடங்கா துயரங்களும் உறைந்திருந்தன. அட்டைக் கடியும், விஷப் பாம்புகளின் அச்சமும், சொக்பின் நிறுவனக் கங்காணிகளின் அடக்குமுறைகளும் இவர்களின் அன்றாட வாழ்க்கையாக இருந்தன. உழைப்புச் சுரண்டலுக்கு எதிராகவும், அடிப்படை உரிமைகளுக்காகவும் இந்தத் தோட்டத்துத் தொழிலாளர்கள் சிந்திய குருதியும் வியர்வையும்தான் இன்று மலேசிய மண்ணில் இந்தியச் சமூகம் நிமிர்ந்து நிற்பதற்கான அச்சாணியாகும். பத்தாங் பெர்சுந்தை என்பது வெறும் மண் அல்ல; அது இந்தியப் பாட்டாளிகளின் தியாக வரலாறு எழுதப்பட்ட தளம்.



கடின உழைப்புக்கு மத்தியில், வார இறுதி நாட்களில் இந்தத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும் ஒளியையும் பாய்ச்சிய ஒற்றைச் சன்னலாகத் திகழ்ந்தது பத்தாங் பெர்சுந்தை நகரின் பிரதான திரையரங்கமான "தங்க நட்சத்திரம்".

தோட்டத்து லாரிகளிலும், மிதிவண்டிகளிலும், நடந்தும் குடும்பம் குடும்பமாக இந்தத் திரையரங்கிற்கு மக்கள் திரண்டு வருவார்கள். எம்.ஜி.ஆர், சிவாஜி, பின்னாளில் ரஜினி, கமல் எனத் தமிழ்நாட்டின் வெள்ளித்திரை நாயகர்களைத் திரையில் கண்டு, தங்கள் அன்றாடத் துயரங்களை மறந்து பாட்டாளிகள் ஆரவாரித்த இடம் அது. திரையரங்கிற்கு வெளியே விற்கப்படும் சுடச்சுட முறுக்கும், கடலையும் அவர்களின் எளிய பொழுதுபோக்கிற்கு மேலும் சுவையூட்டின. சமூக ஒன்றுகூடலுக்கான மையமாகவும், கலாச்சாரப் பாலமாகவும் 'தங்க நட்சத்திரம்' திரையரங்கம் திகழ்ந்தது. சுருக்கமாகக் கூறின், 'தங்க நட்சத்திரம்' என்பது வெறும் செங்கற்களாலும் திரையாலும் ஆன ஒரு கட்டடம் மட்டுமல்ல; அது பத்தாங் பெர்சுந்தை தோட்டத் தொழிலாளர்களின் வியர்வையிலும் கண்ணீரிலும் பூத்த ஒரு பெருமகிழ்ச்சியின் அடையாளம். அன்றாடக் கடின உழைப்பின் சுமையைத் தற்காலிகமாக இறக்கி வைத்து, தங்களின் கனவுகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் உயிர் கொடுத்த ஒரு புகலிடமாக அது விளங்கியது. கால ஓட்டத்தில் பொழுதுபோக்கு ஊடகங்கள் எத்தனையோ மாற்றங்களைச் சந்தித்திருந்தாலும், அந்த எளிய மனிதர்களின் வாழ்வில் கலாச்சாரப் பாலமாகவும், சமூக ஒன்றுகூடலின் மையமாகவும் 'தங்க நட்சத்திரம்' ஏற்படுத்திய தாக்கம் என்றும் அழியாதது. தலைமுறைகள் கடந்தும் அத்தோட்ட மக்களின் கூட்டு நினைவுகளில், இழந்த வசந்த காலத்தின் ஒளிரும் அடையாளமாக இந்தத் திரையரங்கம் என்றும் நிலைத்திருக்கும்.





# உலக நாடுகளை வென்ற தூதர், மலேசியக் கிராமங்களில் தேடிய ஆன்மா

அமெரிக்கா, ஜெர்மனி, லெபனான், சைப்ரஸ் என உலகின் 7 நாடுகளின் தூதராகவும், சிங்கப்பூருக்கான மலேசிய உயர் ஆணையராகவும் சுமார் 33 ஆண்டுகள் உலக அரங்கில் கம்பீரமாக வலம் வந்தவர் டத்தோ இளங்கோ கருப்பண்ணன். 100-க்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, பன்னாட்டுக் கொள்கைகளை வடிவமைத்த இந்த 65 வயது மூத்த தூதர், பணி ஓய்வுக்குப் பின் தன் வாழ்நாளின் மிக முக்கியத் தேடலைக் கையில் எடுத்துள்ளார். அதுதான், தனது சொந்த நாட்டின் விடுபட்ட, மறைக்கப்பட்ட கிராமப்புற அழகை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டுவது.





டத்தோ இளங்கோ அமெரிக்காவில் மலேசியத் தூதராகப் பணியாற்றிய போது, அங்குள்ள பரந்த நிலப்பரப்புகளைத் தனது 4றுனு வாகனத்தில் சாலை வழியாகவே நீண்ட தூரம் கடந்து ரசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பணி ஓய்வு பெற்றவுடன், அதே பாணியில் தனது சொந்த நாடான மலேசியாவை ஏன் முழுமையாகப் பார்க்கக்கூடாது என்ற எண்ணம் அவருக்குள் உதித்தது.

இதன் விளைவு, தனது நெருங்கிய நான்கு நண்பர்களுடன் (மோகன் மற்றும் செல்வராஜன் உள்ளிட்டோர்) இணைந்து தீபகற்ப மலேசியாவின் பட்டிதொட்டியெங்கும் ஒரு நீண்ட கார் பயணத்தைத் தொடங்கினார். பகாங், சுங்கை லெம்பிங் போன்ற அதிகம் அறியப்படாத மலையோரக் கிராமங்கள் முதல் கடலோரப் பகுதிகள் வரை அவர்கள் பயணித்தனர்.






இந்த நீண்ட சுவாரசியமான பயண அனுபவங்கள், அவரை "The Malaysia We Almost Forgot – Unexpected Encounters on the East Coast and West Coast" (நாம் மறந்த மலேசியா – கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைகளில் எதிர்பாராத சந்திப்புகள்) என்ற தலைப்பில் இரண்டு பாகங்கள் கொண்ட புத்தகங்களை எழுதத் தூண்டியது. அவரது தேடலில் கிடைத்தவை மலேசியாவின் உண்மையான பன்முகத்தன்மைக்குச் சான்றாகும்.


கெடாவில் உள்ள ஒரு பாரம்பரிய சீனக் கோபித்தியாம் கடை, கிளந்தானின் உள்பகுதியில் அமைந்திருக்கும் ஒரு சுவையான இந்திய உணவகம், பகாங் மாநிலத்தின் கிராமப்புறச் சாலை ஓரத்தில் இருக்கும் ஒரு மலாய்க்காரரின் சிற்றுண்டிக் கடை முதலியவை பற்றி அவர் சுவாரஸ்மான தகவல்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

"மலேசியாவின் உண்மையான ஆன்மா கோலாலம்பூரின் வானளாவிய இரட்டைக் கோபுரங்களிலோ அல்லது பெரிய நகரங்களிலோ இல்லை. அது வெவ்வேறு பின்னணியைக் கொண்ட மலேசியர்கள் கிராமப்புறங்களில் ஒன்றிணைந்து வாழும் எளிய வாழ்க்கையில்தான் இருக்கிறது" என்று முன்னாள் தூதர் டத்தோ இளங்கோ நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறார்.

இளம் தலைமுறையினர் தங்களது சொந்த ஊர்களைத் தாண்டி, நாட்டின் பிற பகுதிகளின் கலாச்சாரத்தையும் பன்முகத்தன்மையையும் நேசிக்க வேண்டும் என்பதே அவரது முக்கிய நோக்கமாகும். அதனால்தான், பள்ளி குழந்தைகள் கூட எளிதாகப் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய ஆங்கிலத்தில் இந்தப் புத்தகங்களை எழுதியுள்ளார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தைப்பிங் கோலா செபாத்தாங், போர்ட் வெல்ட் போன்ற இடங்கள் வெறும் பழமையின் நினைவாக மட்டுமல்லாமல், மலேசியா எப்படி உலக வர்த்தகத்துடன் இணைந்திருந்தது என்பதற்கான அடையாளமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.




தற்போது ஜோகூர் மற்றும் மலாக்கா ஆகிய தென்பகுதி மாநிலங்களை உள்ளடக்கிய தனது புத்தகத்தின் 3-வது பாகத்தை எழுதி முடிக்கும் பணியில் தீவிரமாக இருக்கும் டத்தோ இளங்கோ, அடுத்ததாகச் சபா மற்றும் சரவாக் மாநிலங்களின் அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்குள் சாலைப் பயணத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளார். உலக அரங்கில் மலேசியாவின் பிரதிநிதியாகப் பணியாற்றிய ஒரு தூதர், இன்று மலேசியக் கிராமங்களின் அமைதியான அழகை உலகம் போற்றச் செய்யும் ஒரு சிறந்த எழுத்தாளராக உருவெடுத்திருப்பது ஓர் உத்வேகம் தரும் சுவாரசியமான பயணமாகும்!





## நாட்டின் அமைதிக்காக கம்யூனிஸ்ட் படைகளுக்குள்

# ஊடுருவிய நிஜ நாயகன்

## டத்தோ பால் கியோங்கின்

# வீர வரலாறு

**மலேசிய நாட்டின் அமைதியும் பாதுகாப்பும் இன்று நாம் அனுபவிக்கும் ஆகப் பெரிய வரப் பிரசாதமாகும். ஆனால், இந்த அமைதிக்கு பின்னால் பல வீரர்களின் இரத்தமும், தியாகமும், அசாத்தியமான உளவுப் பணிகளும் மறைந்துள்ளன. அதில் மிக முக்கியமான ஒரு வரலாற்று நாயகரான, மலேசியாவின் மிக உயரிய வீரத்திரு விருதான 'ஸ்ரீ பஹ்லவான் காகா பெர்காசா' (SP) விருது பெற்ற 82 வயது முன்னாள் போலீஸ் அதிகாரி டத்தோ பால் கியோங்கின் மறக்க முடியாத தியாகப் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பது அவசியமாகும்.**

மலாயாவின் இரண்டாவது அவசரகாலத்தின் போது (1968-1989), கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கு மத்தியில், ஆறு ஆண்டுகள் தனது சொந்த அடையாளத்தை முற்றிலும் மறைத்து, மாறுவேடத்தில் ஒரு கம்யூனிஸ்டாகவே வாழ்ந்த அசாத்தியமான துணிச்சல்காரர் டத்தோ பால் கியோங். அவர் தனது இந்த ஆபத்தான மற்றும் மிரள வைக்கும் உளவுப் பயணத்தை, "The Communist Role I Played: Undercover During The 2nd Malayan Emergency (1968-1989)" என்ற தலைப்பில் சுயசரிதை நூலாக எழுதியுள்ளார்.

"இந்த புத்தகம் எனது சாதனைகளைக் கொண்டாடுவதற்காக அல்ல; மாறாக, நாடு மிகப் பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்ட போது தங்கள் உயிரைத் தியாகம் செய்த மற்றும் போர்க்களத்திலிருந்து வீடு திரும்பாத பல போலீஸ் அதிகாரிகள் மற்றும் ராணுவ வீரர்களின் நினைவுகளைப் போற்றுவதற்காக மட்டுமே" என்று அவர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.


1964-ஆம் ஆண்டு ஒரு சாதாரண போலீஸ்காரராக தன் பணியைத் தொடங்கிய பால் கியோங், தனது கூர்மையான புத்திசாலித்தனத்தால் உளவுத்துறையின் (Special Branch) துப்பறியும் அதிகாரியாக உயர்ந்தார். 1967-இல் ஜோகூரில் செயல்பட்டு வந்த கம்யூனிஸ்ட் ரகசியக் குழுக்களைக் கண்டறிந்து முறியடிப்பதில் முக்கியப் பங்காற்றினார்.

1976-ஆம் ஆண்டில், பேராக் காடுகளில் கம்யூனிஸ்ட் படைகளின் நடமாட்டத்தை



ஒடுக்குவதற்கான 'ஆபரேஷன் பேம்பூ' திட்டத்தின் தரைப்படை தளபதியாக (Ground Commander) நியமிக்கப்பட்டார். இவரது அசாத்திய உளவு நடவடிக்கை மற்றும் துணிச்சலான போர்த் திறமையால் சுமார் 50 கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் முறியடிக்கப்பட்டனர். மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுதப் படையான 13-ஆவது பிரிவின் கீழ் இயங்கிய 'ஐந்தாவது அச்சுறுத்தல் படைப் பிரிவை' (Fifth Assault Unit) 1989-இல் மொத்தமாக சரணடையச் செய்தது இவரது வாழ்நாளின் மிகப் பெரிய வெற்றியாகும்.

மலேசியாவில் இத்தகைய உயரிய 'SP' பதக்கம் பெற்று இன்று நம்மிடையே வாழும் நான்கு வீரர்களில் டத்தோ பால் கியோங் ஒருவராவார். அவர் தனது பேட்டியில், "ஆறு ஆண்டுகள் நான் இரண்டு பெயர்களுடனும், இரண்டு வாழ்க்கையுடனும் வாழ்ந்தேன். ஒன்று எனது நாட்டிற்காக, மற்றொன்று நான் உயிருடன் வீடு திரும்ப வேண்டும் என்று பிரார்த்தனை செய்த என் குடும்பத்திற்காக. நாங்கள் பதக்கங்களுக்காகப் போராடவில்லை. மலேசியாவின் எதிர்காலக் குழந்தைகள் ஒரு நாள் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் தூங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே எங்கள் உயிரைப் பணயம் வைத்தோம். மலேசியர்கள் அனைவரும் இன்று அனுபவிக்கும் இந்த அமைதியின் விலையை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்" என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டுள்ளார்.




**மலேசியாவின் 1957 ஆகஸ்ட் 31 வரலாற்றுச் சிறப்புமிக்க சுதந்திர தினமானது ஒவ்வொரு மலேசியரின் வாழ்விலும் நீங்கா இடம் பிடித்த ஒரு பொன்னாள் ஆகும். பிரிட்டிஷ் ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட்டு, ஒரு சுதந்திர நாடாக மலேசியா (அன்றைய மலாயா) தன் சொந்தக் காலில் நிற்கத் தொடங்கிய அந்தப் பெருமிதம் மிகுந்த தருணத்தை, நாட்டின் 6 முக்கியப் பிரமுகர்கள் தங்களின் இளமைக் கால நினைவுகளாகப் பகிர்ந்து கொள்கின்றனர்.**

# அன்று வானொலி முழக்கம்... இன்று நெஞ்சில் தேசப்பற்று: 1957 சுதந்திர தினத்தை நினைவு கூரும் மலேசிய ஆளுமைகள்

## டான்ஸ்ரீ வி.சி. ஜார்ஜ்

(முன்னாள் வழக்கறிஞர், நீதிபதி மற்றும் நடுவர்)



இவர் லண்டனில் படித்துவிட்டு 1956-ல் மலாயா திரும்பியதும், நாட்டின் முதல் பெண் வழக்கறிஞர்களில் ஒருவரான பி. ஜி. லிம் உடன் இணைந்து 'சென் ~ லிம்' நிறுவனத்தில் சட்டப் பயிற்சி பெற்றார். சுதந்திரத்தன்று மெர்டேகா மைதானத்திற்குச் செல்லும் முன், கிள்ளான் நதிக்கரையில் இருந்த 'தி வாடிகன்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட 'சின் செங் நாம்' உணவகத்தில் நண்பர்களுடன் குளிர்ந்த பீர் குடித்துக் கொண்டாடியுள்ளார். பணக்காரர்கள் மட்டுமே செல்லும் கிளப்புகளில் சேர முடியாத இவர்களுக்கு, அந்த உணவகத்தை நடத்திய குண்டான சீன முதியவர்தான் (அவரை 'போப்' என்று அழைத்தனர்) அடைக்கலம் கொடுத்தார். மேலும், 1956 இறுதியில் லண்டனில் நடந்த சுதந்திரத்திற்கு முந்தைய நடன விழாவில், 5 அடி 11 அங்குல உயரமிருந்த கென்ட் டச்சஸ் (Duchess of Kent) என்ற அரச குடும்பத்து பெண்ணுடன் நடனமாடும் வாய்ப்பைப் பெற்றார். காரணம், அங்கு ஆடுவதற்குப் போதுமான உயரம் கொண்ட ஒரே மலேசியர் இவர் மட்டும்தான்!

## டத்தோ ஓ சோங் பெங்

(இயக்குனர், WCE Holdings Bhd)



சுதந்திரத்தின் போது பினாங்கில் உள்ள புகழ்பெற்ற 'செயின்ட் சேவியர்' பள்ளியில் 13 வயது மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தார். அந்த வயதில் அவருக்கு அரசியல் மாற்றங்கள் குறித்துப் பெரிய புரிதல் இல்லை. பினாங்கு எஸ்பிளனேடில் (Esplanade) நடந்த சுதந்திரப் பிரகடன விழாவை விட, ஜனவரி 1, 1957 அன்று எடின்பரோ பிரபு இளவரசர் பிலிப் வருகை தந்து ஜார்ஜ் டவுன் நகரை ஒரு 'மாநகராட்சியாக' அறிவித்ததே அவரது நினைவில் ஆழமாகப் பதிந்திருந்தது. சுதந்திரத்தன்று "பள்ளிக்கு விடுமுறை" என்ற செய்தி மட்டுமே ஒரு சிறுவனாக அவருக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. தற்போதைய காலகட்டத்தில், ஒவ்வொரு சுதந்திர தினத்திற்கும் தன் வீட்டு வாசலில் இரு தேசியக் கொடிகளை ஏற்றி வைப்பதை இவர் பெருமையுடன் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

## எரிக் பெர்ரிஸ்

(மலேசியாவின் மாஸ்டர் புகைப்படக் கலைஞர்)



சுதந்திரத்தின் போது ஜோகூர், மூவார் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார். வகுப்பறையில் ஆசிரியர்கள் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களுக்குத் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் கற்பித்தனர். அதனால் ஒட்டுமொத்த மூவார் நகரமுமே ஒரு புதிய யுகத்திற்குள், புதிய உலகத்திற்குள் நுழைவது போன்ற பேரார்வத்தில் இருந்தது. அந்தப் பகுதி மக்கள் பலரும் இந்த வரலாற்றுத் தருணத்தைக் காண கோலாலம்பூருக்குப் பயணித்தனர். சுதந்திரத்திற்குப் பின், கலை உலகிலும் சரி, நிஜ வாழ்விலும் சரி, அனைத்து இன மக்களும் காட்டும் ஒற்றுமையும், 'பஹாசா மலேசியா' (தேசிய மொழி) பயன்பாடும் மலேசியர்களை எங்கு சென்றாலும் தனித்துவமாக அடையாளப்படுத்துகிறது என்று இவர் பெருமிதம் கொள்கிறார்.

## டான் ஸ்ரீ ரபிடா அஜிஸ்

(முன்னாள் வர்த்தக, தொழில்துறை அமைச்சர்)



சுதந்திரத்தன்று இவரது குடும்பம் சிலாங்கூர், கோம்பாக்கில் வசித்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நாளுக்காக இவரது தாய் பச்சை நிற கெபாயா ஆடைக்கு ஏற்றவாறு, பிரத்தியேகமாக ஓர் இளஞ்சிவப்பு நிற கைப்பை மற்றும் புதிய காலணிகளை ஆசையாக வாங்கியிருந்தார். அதிகாலை 5.30 மணிக்கே பெற்றோர் மெர்டேகா மைதானத்திற்குப் புறப்பட்டுச் செல்ல, ரபிடா தன் இரு தம்பிகளை (ஒருவர் கைக்குழந்தை) கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றார். வீட்டில் இருந்த 'பிலிப்ஸ்' வானொலியை ஆன் செய்து, நேரடி ஒளிபரப்பின் மூலம் நிகழ்வுகளைக் கேட்டு ரசித்தார். துங்கு அப்துல் ரஹ்மான் "மெர்டேகா!" என்று முழங்கிய போது ஏற்பட்ட தேசப்பற்றையும், நாம் நமது சொந்த நாட்டின் விதியை நாமே தீர்மானிக்கப் போகிறோம் என்ற பரவசத்தையும் இவர் உணர்வுப்பூர்வமாக நினைவு கூர்கிறார்.

## எம்.ஆர். சந்திரன்

(முன்னாள் தேசியத் தலைவர் மற்றும் இயக்குனர், ISP)



1957-ல் இவர் ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அந்தப் பெரிய வளாகத்தில் மொத்தம் ஐந்து மலாயா மாணவர்கள் மட்டுமே தங்கிப் படித்து வந்தனர். ஆஸ்திரேலிய மக்களுக்கு மலாயா அவசரநிலை குறித்தோ அல்லது அங்கு நடந்த கொரில்லாப் போர்கள் குறித்தோ எந்த விழிப்புணர்வும் இல்லாததால், அங்கு மெர்டேக்கா ஒரு பொருட்டாகவே மதிக்கப்படவில்லை. ஆனால், இந்த ஐந்து தேசப்பற்றுள்ள மாணவர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து, பள்ளி வளாகத்திற்குள் மலாயா கொடியைக் கையில் ஏந்தி "மெர்டேக்கா, மெர்டேக்கா" என்று உரக்கக் கூச்சலிட்டு ஓடித் தங்களின் தனித்துவமான சுதந்திர தினத்தைக் கொண்டாடியுள்ளனர்.

## புவான் ஸ்ரீ ரதி கூ

(முன்னாள் ஆசிரியை மற்றும் வரலாற்று அறிஞர் மறைந்த பேராசியர் கூ கே கிம்மின் மனைவி)



இவர் தனது 12 வயதில் பேராக் மாநிலத்தில் உள்ள 'தெலுக்கான்சன்' (தற்போது தெலுக் இந்தான்) என்ற சிறிய நகரில் வளர்ந்தார். பள்ளியில் சுதந்திரம் பற்றிய பேச்சுகள் அதிகமாக இருந்ததால், தன் தந்தையை வற்புறுத்தி மக்கள் திரண்டிருந்த நகரின் 'பாடாங்' (மைதானம்) பகுதிக்கு அழைத்துச் செல்ல வைத்தார். அங்கு அமைக்கப்பட்டிருந்த பெரிய திரைகளில், புகழ்பெற்ற கலைஞர் பி. ரம்லி தோன்றிப் பாடியது ஒட்டுமொத்த மக்களையும் பரவசப்படுத்தியது. நள்ளிரவில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு, மலேசியாவின் தேசியக் கொடி ஏற்றப்பட்ட அந்த வரலாற்றுத் தருணத்தை, ஒரு சிறுமியாகத் தன் தந்தையுடன் ஐஸ்கிரீம் மற்றும் கடலை சாப்பிட்டபடி ரசித்துள்ளார். தான் வளர்ந்து பெரியவளானதும், நாட்டின் பிறப்பிற்குக் காரணமான இந்த வரலாற்றிற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த வரலாற்றுப் பேராசிரியர் கூ கே கிம்மை மணப்பேன் என்று அன்று அவர் நினைத்துக் கூட பார்க்கவில்லை.



# மலாக்காவிலும் வீசுமா நீல அலை?

**ஜோகூர், நெகிரி செம்பிலான் வெற்றிக்குப் பின்னர் வரலாற்று நாயமான மலாக்காவின் அரசியல் களம் என்ன சொல்கிறது?**

மலேசிய அரசியலில் அன்மைய காலமாக ம எற்பட்டு வரும் அதிரடி மாற்றங்கள், குறிபிபாக ஜோகூர் மற்றும் நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தல்களில் பாரிசான் நேஷனல் பெற்றுள்ள மகத்தான வெற்றிகள், நாட்டின் அரசியல் திசையை முற்றிலும் மாற்றி அமைத்துள்ளன. இந்த இரு மாநிலங்களின் 'நீல அலை' செல்வாக்கு, அடுத்து தேர்தல் களம் காணவிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மலாக்கா மாநிலத்திலும் எதிரொலிக்குமா என்ற கேள்வி தற்போது மலேசிய அரசியல் வட்டாரங்களில் மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

**மலாக்கா – 28 சட்டமன்றத் தொகுதிகள்**




**நீல அலை தொடருமா?**
**மலாக்கா தீர்மானிக்கும்!**

## வெற்றியின் காரணங்கள் என்ன?

### 1 உத்தி ரீதியான ஒருங்கிணைப்பு

பெரிகாத்தான் நேஷனல் கூட்டணியுடன் உத்தி ரீதியான ஒருங்கிணைப்பு, மலாய் வாக்குகளைச் சிதற விடாமல் பாரிசான் நேஷனல் நோக்கித் திருப்பியது.

### 2 அடித்தட்டு தொடர்பு ~ வலுவான கட்டமைப்பு

அடித்தட்டு மக்களுடனான நேரடித் தொடர்பு மற்றும் வலுவான உள்ளூர் கட்டமைப்பு ஆகியவை பாரிசான் நேஷனல் கூட்டணிக்கு அசுர பலத்தைத் தந்துள்ளன

## மலாக்காவில் நீல அலை பரவ காரணங்கள்

- ஜோகூர், நெகிரி செம்பிலானைப் போலவே கிராமப்புற மற்றும் பகுதி-நகர்ப்புற தன்மை.
- மலாய் வாக்காளர்கள் கணிசமாக உள்ளதால் பாரிசான் நேஷனலின் பாரம்பரிய செல்வாக்கு மீட்பு எளிது.
- மசீச, ம.இ.கா போன்ற கட்சிகள் பல்லின தொகுதிகளில் வாக்கு வங்கியை ஒருங்கிணைத்தால் நகர்ப்புறத்திலும் போட்டி கூடுமை.
- அரசியல் குழப்பத்தால் சோர்வடைந்த மக்கள், நிலையான மற்றும் பலமான அரசாங்கத்தை விரும்புகிறார்கள்.



## மலாக்காவில் பாரிசான் நேஷனல் எதிர்கொள்ளும் சவால்கள்

- மலாக்கா மாநகரம் மற்றும் சுற்றியுள்ள நகர்ப்புறங்களில் பக்காத்தான் ஹராப்பனக்கு இன்னமும் கணிசமான ஆதரவு
- நடுத்தர வர்க்க வாக்காளர்கள் பொருளாதாரப் பிரச்சிளைகளை முன் வைத்து மாற்றுச் சிந்தனையில் ஈடுபடலாம்.
- கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடு இழுபறி ஏற்பட்டால், உள்நாட்டு குழப்பங்கள் உருவாகலாம்.

## நீல அலை வென்றால் – மலாக்காவின் எதிர்காலம்

- கொள்கை ரீதியான தொடர்ச்சி உறுதி செய்யப்படும்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை அதிகரிக்கும்.
- உள்கட்டமைப்பு மேம்பாடு வேகம் பெறும்.
- சுற்றுலாத் துறை புத்துயிர் பெறும்.

**சுருக்கமாக**

ஜோகூர் மற்றும் நெதிரி செம்பிலாணில் வீசிய 'நீல அலை' மலாக்கள மாநிலத் தேர்தலிலும் பலமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. பாரிசான் நேஷனல்லின் தற்போதைய அரசியல் வேகம் மலாக்காவிலும் எதிரொலிக்க வாய்பவுகள் அதிகம், நகர்ப்புற வாக்காளர்களின் பொருளாதாரக் கவலைகளை போக்கி, தொகுதிப் பங்கீடுகளைச் சரியாகக் கையாண்டால் மட்டுமே, 28 சட்டமன்றத் தொகுதிகளை கொண்ட மலாக்காவிலும் பாரிசான் நேஷனல் தனது வெற்றிக் கொடியை முழுமையாக நாட்ட முடியும்.



## மலேசியாவில் அகதிகள் விவகாரம்:

# வரலாற்றுப் பாடங்களும் நீண்ட காலச் சவால்களும்

**மலேசியா, அதன் புவியியல் இருப்பிடம் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை காரணமாக, தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் தஞ்சம் தேடி வரும் பலதரப்பட்ட மக்களுக்கு நீண்ட காலமாக ஒரு புகலிடமாக இருந்து வருகிறது. கடந்த காலங்களில் வியட்நாம் படகு மக்களின் வருகையைக் கையாண்ட மலேசியா, தற்போது ரோஹிங்யா அகதிகளின் நீண்ட கால இருப்பு தொடர்பான சவால்களையும் எதிர்கொண்டு வருகிறது. நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதன் அவசியத்தை முன் வைத்து இந்த விவகாரம் உடனடியாகக் கையாளப்பட வேண்டிய அவசியம் உள்ளது.**




1970-களின் பிற்பகுதியிலும் 1980-களிலும் வியட்நாம் போரைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான அகதிகள் படகுகள் மூலம் மலேசியக் கடற்கரைகளை வந்தடைந்தனர். அப்போது மலேசிய அரசாங்கம் நாட்டின் நீண்ட கால பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை பாதிக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தது.

வந்திறங்கிய அகதிகள் திரங்கானு பூலாவ் பீடோங், கோலாலம்பூர் சுங்கை பீசி போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் தற்காலிகமாக மட்டுமே தங்க வைக்கப்பட்டனர். அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவியுடன், அவர்கள் மூன்றாம் நாடுகளுக்கு மறுகுடியேற்றம் செய்யப்பட்டனர் அல்லது நிலைமை சீரானதும் கட்டம் கட்டமாகத் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். மலேசியா அவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமையோ அல்லது நீண்ட கால தங்குமிட உரிமையோ வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





மியன்மாரின் ராகைன் மாநிலத்தில் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடிகள் காரணமாக, கடந்த சில பத்தாண்டுகளாக ஆயிரக்கணக்கான ரோஹிங்யா மக்கள் மலேசியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர். வியட்நாம் அகதிகள் விவகாரத்தைப் போலன்றி, இந்த விவகாரம் பல ஆண்டுகளாக நீடித்து வருவது நாட்டின் சமூக நிலைத்தன்மைக்கு ஒரு பெரிய சவாலாக மாறியுள்ளது.

மலேசியா 1951-ஆம் ஆண்டு அகதிகள் தொடர்பான ஐநா சாசனத்தில் கையெழுத்திடாத ஒரு நாடாகும். எனவே, சட்டப்பூர்வ ஆவணங்கள் இன்றி நாட்டின் எல்லைக்குள் தங்கியிருக்கும் பெருமளவிலான மக்கள், நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பிற்கும் உள்நாட்டு நிலைத்தன்மைக்கும் ஒரு சவாலாகவே பார்க்கப்படுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் நீண்ட காலம் ஒரே பகுதியில் தங்கி வாழும் போது, அங்குள்ள உள்ளூர் கலாச்சாரம், சட்ட ஒழுங்கு மற்றும் சமூகக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உள்ளூர் மக்களுக்கும் குடியேற்றவாசிகளுக்கும் இடையே சமூக ரீதியான உராய்வுகள் ஏற்படுவது நாட்டின் அமைதியான நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையலாம்.

பொது சுகாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துவதில் உள்ளூர் மக்களுக்கான வாய்ப்புகள் பகிரப்படும் நிலை ஏற்படுகிறது. இது நாட்டின் நிதி நிலை மற்றும் பொதுச் சேவைகளின் நிலைத்தன்மையில் கூடுதல் அழுத்தத்தை உருவாக்குகிறது. வியட்நாம் அகதிகளைப் போல ரோஹிங்யா மக்களை ஏற்றுக் கொள்வதற்கு மூன்றாம் நாடுகள் போதிய ஆர்வம் காட்டுவதில்லை. இதனால், அவர்கள் மலேசியாவிலேயே நிரந்தரமாகத் தங்கி விடும் சூழல் உருவாகிறது.

மலேசியாவின் நீண்ட கால தேசியப் பாதுகாப்பு, இறையாண்மை மற்றும் சமூக நிலைத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டுமானால், அரசாங்கம் இனி மனிதாபிமானக் காரணங்களைக் காட்டித் தயங்காமல், ரோஹிங்யா மக்களைக் கட்டம் கட்டமாக நாட்டை விட்டு வெளியேற்றுவதில் மிகத் தீர்க்கமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வியட்நாம் படகு மக்களைத் துணிச்சலுடன் திருப்பி அனுப்பிய வரலாற்றுப் பாடத்தைப் பின்பற்றி, இவர்களையும் தற்காலிகக் குடியேற்றவாசிகளாக மட்டுமே கருதி, அவர்களின் தாயகத்திற்குப் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்புவதற்கான உறுதியான செயல்முறையை மலேசியா உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

இந்தச் சட்டவிரோதக் குடியேற்றப் பிரச்சினைக்கு இத்தகைய கடுமையான மற்றும் தீர்க்கமான முறையில் முற்றுப்புள்ளி வைப்பது மட்டுமே, எதிர்காலத்தில் மலேசியாவின் உள்நாட்டு அமைதிக்கும் பாதுகாப்பு கட்டமைப்புக்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை வேரோடு அகற்றுவதற்கான ஒரே நிரந்தரத் தீர்வாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



**மலேசிய விமானப் போக்குவரத்துத் துறை அனைத்துலக அளவில் மிக உயர்ந்த பாதுகாப்புத் தரங்களைக் கொண்டதாகக் கருதப்பட்டாலும், அண்மையில் மலேசிய ஏர்லைன்ஸ் விமானி ஒருவர் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட அனல் பறக்கும் சம்பவம், இத்துறைக்குள்ளே மறைந்திருக்கும் ஒரு கள்ளச் சந்தைக் கட்டமைப்பை அம்பலப்படுத்தியுள்ளது. பயணிகள் மற்றும் விமானத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான முதன்மை அதிகாரிகளே போதைப்பொருள் கடத்தல்காரர்களின் 'கூலிகளாக' மாறும் அதிர்ச்சியூட்டும் போக்கு தற்போது தீவிரக் கவலையை ஏற்படுத்தியுள்ளது.**



# வானில் பறக்கும் போதைக் கப்பல்கள்: மலேசிய ஏவியேஷன் துறையை உலுக்கும்

## 'விமானி கடத்தல்' விவகாரங்கள்

மலேசிய ஏவியேஷன் வரலாற்றில் விமானிகள் மற்றும் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட முக்கிய போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் மிக ஆபத்தானதாகும்.

கடந்த ஜூலை மாத இறுதியில், மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் 39 வயது விமானி ஒருவர் மலேசியாவிலிருந்து ஜகார்த்தாவுக்கு (MH727) பயணிகள் விமானத்தை வெற்றிகரமாக இயக்கித் தரையிறக்கினார். ஆனால், தரையிறங்கிய சில நிமிடங்களிலேயே இந்தோனேசிய சுங்கத் துறையினரால் அவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்.

அவரது பயணப் பெட்டியிலிருந்து 45 மில்லியன் ரிங்கிட்



மதிப்புள்ள 70,000-க்கும் மேற்பட்ட எக்ஸ்டச மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. மருத்துவப் பரிசோதனையில், மெத்தம்பேட்டமைன் மற்றும் கோகோயின் போன்ற மூன்று வீரியமிக்க போதைப்பொருட்களை உட்கொண்ட போதையிலேயே அவர் நூற்றுக்கணக்கான பயணிகளின் உயிரைப் பணையம் வைத்து விமானத்தை இயக்கியது உறுதி செய்யப்பட்டது. வெறும் 50 ஆயிரம் ரிங்கிட் கூலிக்காக அனைத்துலக கடத்தல் கும்பலின் முகவராக அவர் செயல்பட்டுள்ளார்.

விமானிகள் போதைப்பொருள் கடத்துவது இது முதல் முறையல்ல என்பதை வரலாறு நிரூபிக்கிறது. இதே போன்று, 2012-ஆம் ஆண்டில் மலேசிய ஏர்லைன்ஸ் விமானி 30 வயது தியாகு சுப்ரமணியம் என்பவர் ஆஸ்திரேலியாவின் சிட்னி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

விமானி தியாகு, தனது பயணப் பெட்டியில் மறைத்து வைத்திருந்த 5 கிலோ மெத்தம்பேட்டமைன் (Ice) போதைப்பொருளைக் கடத்தி வந்த போது பிடிபட்டார். அதற்கு முந்தைய ஆண்டிலும் (2011) அவர் 1.5 கிலோ ஹெராயின் போதைப்பொருளைச் சிட்னி ஹோட்டல் ஒன்றுக்கு வெற்றிகரமாகக் கடத்தியது விசாரணையில் தெரிய வந்தது. 2013-இல் அவருக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றத்தால் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஏன் கடத்தல் கும்பல்கள் விமானிகளையும், விமானப் பணிப் பெண்களையும் குறி வைக்கின்றன? பொதுவாக, விமானப் பணியாளர்கள் தீவிரமான சோதனை வளையங்களுக்குள் உட்படுத்தப்பட மாட்டார்கள் என்ற தவறான உத்தி மற்றும் அவர்களின் சிறப்புப் போக்குவரத்துப் பாதைகளைப் பயன்படுத்திக் கடத்தல்காரர்கள் காய்களை நகர்த்துகின்றனர்.

அதிகப்படியான கடன்கள் அல்லது ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்படும் சில விமானப் பணியாளர்களை அனைத்துலக போதைப்பொருள் சிண்டிகேட்டுகள் எளிதாகத் தங்களின் வலையில் வீழ்த்துகின்றன. இந்தத் தொடர் சம்பவங்கள் மலேசியாவின் அனைத்துலக விமான நிலையங்களின் (KLIA) பாதுகாப்பு நடைமுறைகளைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.

தற்போதைய 2026 சம்பவத்தைத் தொடர்ந்து, பில்லியன் கணக்கிலான போதைப்பொருட்கள் மலேசியப் பாதுகாப்புச் சோதனைகளைத் தாண்டி எப்படி விமானத்திற்குள் சென்றன என்பதை அறிய புக்கிட் அமான் போதைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை விமான நிலையத்தின் சிசிடிவி காட்சிகளைத் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

விமானத்தில் ஏறும் அனைத்துப் பணியாளர்களுக்கும் கடுமையான எக்ஸ்ரே சோதனைகள் மற்றும் எவ்விதப் பாரபட்சமுமற்ற உடல் பரிசோதனைகளை இனி கட்டாயமாக்கப் போவதாக சி.ஏ.ஏ.எம். அறிவித்துள்ளது.

விமானப் போக்குவரத்துத் துறையில் நிலவும் அலட்சியம் என்பது நாட்டின் எல்லைப் பாதுகாப்பிற்கு மட்டுமல்ல, அப்பாவிப் பயணிகளின் உயிருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாகும். மலேசிய விமான நிறுவனங்கள் தங்களின் பணியாளர்களைத் தொடர்ச்சியான போதைப்பொருள் பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன், இது போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது மரண தண்டனை வரை விதிக்கக்கூடிய அனைத்துலகக் கடுமையான சட்டங்களை இந்தோனேசியா போன்ற நாடுகளைப் போல மலேசியாவும் சமரசமின்றி அமல்படுத்த வேண்டும். அப்போதுதான் மலேசிய ஏவியேஷன் துறையின் இழந்த நற்பெயரையும், நாட்டின் எல்லை நிலைத்தன்மையையும் முழுமையாக மீட்டெடுக்க முடியும்.





# சுயதொழில் மற்றும் தன்னியக்கப் பணி: இளம் மலேசியர்களின் புதிய தளம்

மலேசியாவில் பாரம்பரிய அலுவலக வேலைகளைத் தாண்டி, இளம் தலைமுறையினர் மத்தியில் சுயதொழில் மற்றும் தன்னியக்கப் பணி (Freelancing) செய்யும் போக்கு கணிசமாக அதிகரித்து வருகிறது. 'மைலேபர்ஹப்' தரவுகளின்படி, 2013 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் சுயதொழில் மற்றும் தன்னியக்கப் பணியில் ஈடுபட்டுள்ள இளைஞர்களின் எண்ணிக்கையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மாறி வரும் பொருளாதாரச் சூழலால், குறைந்த வயதுடைய பிரிவினரே இதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்:

- 15-19 வயதுப் பிரிவு: மிக அதிகபட்சமாக 161ரூ வளர்ச்சி கண்டுள்ளது (25,900 லிருந்து 67,700 ஆக உயர்வு).

- 20-24 வயதுப் பிரிவு: அடுத்தபடியாக 123% வளர்ச்சி பதிவாகியுள்ளது (1,28,000 லிருந்து 2,86,000 ஆக உயர்வு).

- 25-29 வயதுப் பிரிவு: 34% வளர்ச்சி அடைந்துள்ளது.

அதே நேரத்தில், 45 முதல் 59 வயது வரையிலான முதிர்ந்த பணியாளர்களிடையே சுயதொழில் செய்யும் போக்கு 5% முதல் 20% வரை குறைந்துள்ளதும் புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

### தன்னியக்கப் பணியைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள்

இளைஞர்கள் சுயதொழில் மற்றும் தன்னியக்கப் பணிப் பாதையைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல்வேறு தனிப்பட்ட மற்றும் பொருளாதாரக் காரணங்கள் உள்ளன:

1. நேர சுதந்திரம்: அலுவலக நேரக் கட்டுப்பாடுகள் இன்றி, தங்களின் சொந்த விருப்பத்திற்கேற்ப வேலை நேரத்தை அமைத்துக் கொள்ள முடிகிறது.

2. வருமான வாய்ப்புகள்: திறமைக்கேற்ப நிலையான மாதச் சம்பளத்தை விட அதிக வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகள் இதில் உள்ளன.

3. வேலை வாய்ப்புத் தட்டுப்பாடு: பெருந்தொற்றுக்குப் பிந்தைய சவாலான வேலைச் சந்தை மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களால், வேறு வழியின்றி தன்னியக்கப் பணித் துறையைத் தேர்ந்தெடுத்தவர்களும் இருக்கிறார்கள்.

4. களம் காணும் இளைஞர்களின் அனுபவங்கள் இந்தக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள சில முக்கிய நபர்களின் வாழ்வியல்



### உதாரணங்கள்:

- ஹஸிக் அஸ்ரி ஹஸ்புல்லா (வயது 28, முவே தாய் பயிற்சியாளர்): தனது சொந்த வருமான ஆதாரத்தை உருவாக்கவும், அலுவலக எல்லைக்குள் சிக்காமல் இருக்கவும் சுயதொழிலைத் தொடங்கினார். பயிற்சியாளராக இருப்பதுடன், கேக் விற்பனை மற்றும் சொந்த பிராண்ட்



தயாரிப்புகளையும் கவனித்து வருகிறார்.

- ஃபைஸ்நூர் ஐன் அஹ்மத் பக்ரி (வயது 35, தனியார் ஆசிரியர்): குடும்பக் கடமைகள், மருத்துவம் மற்றும் பயணங்களுக்காகத் தனது கற்பித்தல் அட்டவணையை நெகிழ்வுத்தன்மையுடன் மாற்றிக் கொள்ள தன்னியக்கப் பணி இவருக்கு உதவுகிறது.

- சிவானி தர்மோதிரன் (வயது 30, ஆடியோ தயாரிப்பாளர்): பெருந்தொற்றுக்குப் பிறகு வேலை தேடுவதில் இருந்த சிரமத்தால் இத்துறையில் நுழைந்தார். ஆரம்பத்தில் புராஜெக்ட் அடிப்படையில் பணி புரிந்த இவர், தற்போது மாதாந்திர ஒப்பந்த அடிப்படையில் ஓரளவு நிதி நிலைத்தன்மையைப் பெற்றுள்ளார்.

- ரூபன் ரவி (வயது 28, ஆடியோ பொறியாளர்/சுயேட்சை ஒப்பந்ததாரர்): தனது துறையில் வழக்கமான வேலை வாய்ப்புகள் குறைவாக இருந்ததால், அனிச்சையாகத் தன்னியக்கப் பணி செய்யத் தொடங்கினார்.

### தன்னியக்கப் பணியில் உள்ள சவால்கள் மற்றும் அபாயங்கள்

இந்தத் தொழிலில் சுதந்திரம் இருந்தாலும், அதில் உள்ள நடைமுறைச் சவால்களை நிபுணர்களும் இளைஞர்களும் சுட்டிக் காட்டுகின்றனர்:

- நிதி மேலாண்மை மற்றும் நிச்சயமற்றதன்மை: வாடிக்கையாளர்கள் எப்போதும் சரியான நேரத்தில் பணம் செலுத்துவதில்லை. இதனால் எதிர்காலத் திட்டமிடல் மற்றும் நிதி நிர்வாகம் சவாலாக மாறுகிறது.

- சமூகப் பாதுகாப்பு இல்லாமை: நிரந்தர ஊழியர்களுக்குக் கிடைக்கும் நுஞுகு (மலேசிய வருங்கால வைப்பு நிதி) அல்லது சோக்சோ (Socso) போன்ற காப்பீட்டுப் பலன்கள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. தங்களின் மருத்துவக் காப்பீடு மற்றும் சேமிப்பை இவர்களே தனிப்பட்ட முறையில் நிர்வகிக்க வேண்டும்.

- அதிவேகப் போட்டி: இணையம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஹஐ) தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால், சிறப்புத் திறன்கள் பலருக்கும் எளிதாகக் கிடைக்கின்றன. இதனால் சந்தையில் போட்டி அதிகரித்து, சேவைகளுக்கான கட்டண விகிதம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இளம் மலேசியர்களுக்குத் தன்னியக்கப் பணி என்பது ஒரு சிறந்த "வாழ்க்கைமுறைத் தேர்வாக" (Lifestyle choice) மாறினாலும், அதில் உள்ள நீண்டகால அபாயங்கள் மற்றும் நிதிப் பாதுகாப்பின்மை குறித்து நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். முறையான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும், தொழில்துறைக்கு ஏற்ற தகுதிகளும் இருந்தால் மட்டுமே இந்த நெகிழ்வான தொழில்முறை எதிர்காலத்தில் நிலையான வளர்ச்சியைத் தரும்.



# கடல் அலைகளுடன்
## ஒரு வாழ்வாதாரப் போராட்டம்:

மலேசியாவின் பொருளாதாரப் பேரியக்கமாக விளங்கும் பெட்ரோனாஸ் நிறுவனத்தின் ஆகச் சிறந்த உந்துசக்தியாகத் திகழ்வது, தென்சீனக் கடலின் நடுவே அமைந்துள்ள எண்ணெய்த் துரப்பண மேடைகளில் தங்களின் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றும் ஊழியர்கள் ஆவர். நிலப்பரப்பிலிருந்து பல நூறு கிலோமீட்டர் தொலைவில், சுற்றிலும் அலைகளின் சத்தமும் எல்லையற்ற நீலக்கடலும் மட்டுமே நிறைந்த ஒரு சூழலில் இவர்கள் மேற்கொள்ளும் பணிகள் சவால்கள் நிறைந்தவை.

இந்தத் தொழிலாளர்கள் தங்களின் பணிக்காலம் முழுவதும் அந்தத் துரப்பண மேடையிலேயே தங்கி வேலை செய்ய வேண்டும். உறைவிடம், உணவகம், மருத்துவ அறை என அனைத்தும் அந்த இரும்பு மேடைக்குள்ளேயே அவர்களுக்கு அமைக்கப்பட்டிருக்கும். சுழற்சி முறையில் 24 மணி நேரமும் இயங்கும் இந்த மேடைகளில், மிகக் கடுமையான தட்பவெப்ப நிலைகளையும், கடல் சீற்றங்களையும் எதிர்கொண்டு இவர்கள் தங்களின் கடமையை ஆற்றுகின்றனர்.



# தென்சீனக் கடலின் இரும்பு மனிதர்கள்



இந்த ஊழியர்களின் பணி முறை மிகவும் தனித்துவமானது. பொதுவாக, அவர்கள் இரண்டு வாரங்கள் தொடர்ந்து துரப்பண மேடையில் தங்கி மிகக் கடுமையான உடல் உழைப்பைச் செலுத்த வேண்டும். அதன் பிறகுதான் அவர்களுக்கு இரண்டு வாரங்கள் விடுமுறை அளிக்கப்படுகிறது.

அந்த விடுமுறைச் சமயங்களில்தான் அவர்கள் தங்களின் குடும்பத்தினரைக் காணவும், சொந்த ஊருக்குத் திரும்பவும் முடியும்.

இரண்டு வாரக் கடல் வாழ்க்கைக்குப் பிறகு, தங்களின் அன்பிற்குரியவர்களைச் சந்திக்கும் அந்த நொடிக்காகவே இவர்கள் ஒவ்வொரு நாளும் உழைக்கின்றனர்.

கடலின் நடுவே இருக்கும் இவர்களையும் வெளி உலகத்தையும் இணைக்கும் ஒரே முக்கியப் பாலம் ஹெலிகாப்டர் மட்டுமே ஆகும். திரெங்கானு மாநிலத்தின் கெர்த்தேவிலிருந்து புறப்படும் இந்த ஹெலிகாப்டர்கள், துரப்பண மேடையின் மேல்புறம் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள தளத்தில் வந்திறங்குகின்றன.

இரண்டு வாரப் பணி முடிந்து வீடு திரும்புபவர்களை ஏற்றிச் செல்வதற்கும், புதிய சுழற்சி முறை





பணியாளர்களைக் கொண்டு வந்து இறக்குவதற்கும் இந்த ஹெலிகாப்டரே முதன்மைப் போக்குவரத்தாக விளங்குகிறது. அதுமட்டுமின்றி, கடலின் நடுவே சமைப்பதற்கான புதிய காய்கறிகள், இறைச்சி, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருத்துவத் தளவாடங்களை இந்த ஹெலிகாப்டர்களே உடனுக்குடன் கொண்டுச் சேர்க்கின்றன.



தனிமை, குடும்பத்தைப் பிரிந்திருக்கும் ஏக்கம், எந்நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டிய ஆபத்தான பணிச்சூழல் எனப் பல சவால்கள் இவர்களது அன்றாட வாழ்க்கையில் கலந்திருக்கின்றன. இருப்பினும், நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தடையின்றி நகர்த்துவதிலும் தங்களின் உழைப்பு முக்கியப் பங்காற்றுகிறது என்ற பெருமிதம்



இவர்களின் முகத்தில் எப்போதும் இருக்கும்.

தென்சீனக் கடலின் அலைகளுக்கு நடுவே, சுடர்விட்டு எரியும் அந்தத் துரப்பண மேடைகளின் வெளிச்சத்தை விட, அங்குப் பணியாற்றும் மனிதர்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும்தான் மிகப் பிரகாசமானது.



# சாம்பலிலிருந்து உதித்த சிங்கங்கள்




**இயற்கைப் பேரிடர்களும் விபத்துகளும் எதிர்பாராமல் நிகழும் போது, மனித உயிர்களைக் காக்கும் உன்னதப் பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் ஒரு சிறப்புப் படை மலேசியாவிற்கு உள்ளது. அதுதான் SMART (Special Malaysia Disaster Assistance and Rescue Team) எனப்படும் மலேசிய சிறப்புப் பேரிடர் உதவி மற்றும் மீட்புக் குழு ஆகும். 1993-ம் ஆண்டு நாட்டை உலுக்கிய 'ஹைலண்ட்ஸ் டவர்' அடுக்குமாடி குடியிருப்பு சரிவுப் பேரிடரின் கடுமையான படிப்பினையாக உருவான இந்தக் குழு, இன்று உலகத்தரம் வாய்ந்த ஒரு மீட்புப் படையாக உருவெடுத்துள்ளது.**



1993 டிசம்பர் 11 அன்று உலு கிள்ளானில் நிகழ்ந்த ஹைலண்ட்ஸ் டவர் பேரிடரின் போது, இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் நவீன தொழில்நுட்பமோ, போதிய நிபுணத்துவமோ மலேசியாவில் இல்லை. வெளிநாட்டு மீட்புக் குழுக்களின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டிய சூழல் நிலவியது.

இந்த இக்கட்டான நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க, மலேசிய அமைச்சரவை எடுத்த முடிவின்படி 1994 மே 18 அன்று அதிகாரப்பூர்வமாக SMART குழு தோற்றுவிக்கப்பட்டது.

இந்த SMART குழு என்பது மலேசியாவின் மூன்று முக்கியப் பாதுகாப்பு மற்றும் அவசரக்கால சேவைப் பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் மிகச் சிறந்த, திறமையான வீரர்களைக் கொண்ட ஓர் உயரடுக்குப் படையாகும்.



மலேசிய தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை, அரச மலேசிய போலீஸ் படை மற்றும் மலேசிய ஆயுதப்படை ஆகிய அமைப்புகளிலிருந்து கடுமையான உடற்தகுதித் தேர்வுகள், மன உறுதிச் சோதனைகள் மற்றும் அதிதீவிரப் பயிற்சிகளுக்குப் பிறகே வீரர்கள் இக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மலேசியாவின் தேசிய பேரிடர் மேலாண்மை முகமையின் (NADMA)



கீழ் செயல்படும் இந்த SMART குழு, உலகளவில் மிக உயரிய தகுதியைப் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் ஐசூளுஹசுஹமு அமைப்பால், உலகத்தரம் வாய்ந்த 'Heavy Urban Search and Rescue' குழுவாக இது சான்றளிக்கப்பட்டுள்ளது. இந்த உயரிய அங்கீகாரத்தைப் பெற்ற தென்கிழக்கு ஆசியாவின் இரண்டாவது நாடு மலேசியா ஆகும். இதனால், அனைத்துலகப் பேரிடர்களின் போது எந்தவொரு வெளிநாட்டு மேற்பார்வையும் இன்றி இக்குழுவால் தனித்துச் செயல்பட முடிகிறது.

நகர்ப்புறத் தேடல் மற்றும் மீட்பு, மலைப்பாங்கான இடங்களில் மீட்புப் பணி மற்றும் நீரில் மூழ்குபவர்களை மீட்டல்




போன்ற பல்வேறு சவாலான பணிகளில் இக்குழு ஈடுபடுகிறது. இதற்காக, இடிபாடுகளுக்கு அடியில் இருக்கும் மனிதர்களின் இதயத் துடிப்பைக் கண்டறியும் 'பயோ-ரேடார்' கருவிகள், அதிநெருக்கடி கேமராக்கள் மற்றும் சமிக்ஞை கண்டறியும் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.

மேலும், மனிதர்களால் கண்டறிய முடியாத இடங்களில் சிக்கியிருக்கும் மனித உயிர்களைக் துப்பறிந்து கண்டுபிடிக்க பிரத்யேகமாகப் பயிற்சி பெற்ற மோப்ப நாய் படையும் இக்குழுவில் முக்கியப் பங்கு வகிக்கிறது.


மலேசியாவில் ஏற்படும் நிலச்சரிவுகள், பெரிய அளவிலான வெள்ளப் பெருக்கு போன்ற உள்நாட்டுப் பேரிடர்களைத் தாண்டி, சர்வதேச அளவிலும் இக்குழு பல சாதனைகளைப் படைத்துள்ளது. துருக்கியே நிலநடுக்கம், ஜப்பான் சுனாமி மற்றும் உக்ரைன் ஆழ17 விமானப் பேரிடர் போன்ற ஆபத்தான சர்வதேசச் சூழல்களிலும் இக்குழு துணிச்சலுடன் களம் இறங்கிப் பணியாற்றியுள்ளது.

அன்று போதிய நிபுணத்துவம் இல்லாமல் தவித்த மலேசியா, இன்று உலக நாடுகளுக்கே பேரிடர் காலங்களில் ஓடிச் சென்று உதவும் அளவிற்குத் தகுதி பெற்றுள்ளது. தன் நாட்டின் குடிமக்களையும், உலகெங்கிலும் உள்ள மனித உயிர்களையும் காக்க 24 மணி நேரமும் விழிப்புடன் செயல்படும் SMART மீட்புக் குழு, மலேசியாவின் உண்மையான பெருமையாகும்.

**உலகப் பணக்காரர்களின் பட்டியலில் மலேசியாவின் முகவரியாகத் திகழ்ந்தவர் டான் ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணன். தொலைத்தொடர்பு, செயற்கைக்கோள் தொலைக்காட்சி, எண்ணெய் மற்றும் எரிவாயு எனப் பல்வேறு துறைகளில் கொடிகட்டிப் பறந்த இந்தத் தமிழ் முகத்தின் மறைவு, உலக வர்த்தக அரங்கில் ஒரு பெரிய வரலாற்றுப் பக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. 'ஏகே' (AK) என்று நெருக்கமானவர்களால் அன்போடு அழைக்கப்பட்ட அவரது மறைவுக்குப் பின், அவரின் பல்லாயிரக் கோடி மதிப்புள்ள பிரம்மாண்ட சொத்துச் சாம்ராஜ்யம் தற்போது யாரிடம் உள்ளது? கோடீஸ்வரத் தந்தைக்குப் பின்னால் இருக்கும் குடும்பத் திருப்பங்கள் என்ன? எந்த ஒரு சினிமா படத்திற்கும் குறைவில்லாத சுவாரசியங்கள் நிறைந்த அவரது சாம்ராஜ்யத்தின் பின்னணி இதோ.**



## ஆனந்த கிருஷ்ணனின் பில்லியன் டாலர்



# சொத்துக்கள் என்னவானது?

## ▶வாரிசுகளின் ரகசியப் பின்னணி

ஆனந்த கிருஷ்ணனின் சொத்துக்களைப் பற்றிப் பேசும் போதே உலகிற்கு முதலில் வியப்பை ஏற்படுத்துவது அவரது ஒரே மகனான 'வென் அஜான் சிரிபான்யோ' தான்.

பல்லாயிரக் கோடி சொத்துக்களுக்கு ஒரே வாரிசாகப் பிறந்து, லண்டனில் உயர்க்கல்வி பயின்ற இவர், நினைத்திருந்தால் உலகையே விலைக்கு வாங்கியிருக்கலாம். ஆனால், விதி அவரிடம் வேறு ஒரு திட்டத்தை வைத்திருந்தது. தனது 18வது வயதிலேயே உலக இன்பங்களைத் துறந்தார் சிரிபான்யோ.



ஒருமுறை தனது தாயின் குடும்பமொன்றின் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்காக தாய்லாந்து சென்றவர், அங்குள்ள பௌத்த மதக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். தந்தையின் அத்தனை சொத்துக்களையும், ஆடம்பர கார்ப்பரேட் வாழ்க்கையையும் வேண்டாம் என்று ஒரு நொடியில் உதறி விட்டு, காவி உடை தரித்து பௌத்த துறவியாக மாறினார்.

தற்போதும் அவர் தாய்லாந்து-மியன்மார் எல்லைப் பகுதியிலுள்ள ஓர் அடர்ந்த காட்டு மடாலயத்தில், மின்சாரம் கூட இல்லாத மிக எளிமையான சூழலில், பிச்சை எடுத்து உண்ணும் துறவற வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார். தன் தந்தையின் சொத்துக்களில் தனக்கு எவ்விதப் பங்கும் தேவையில்லை என்று அவர் சட்டப்பூர்வமாக முன்பே எழுதித் தந்து விட்டார். ஒரு பெரும் சாம்ராஜ்யத்தின் இளவரசன், அரியணையைத் துறந்த இந்தத் திருப்பம் உலகையே உலுக்கியது.

ஒரே மகன் துறவியாகி விட்டதால், ஆனந்த கிருஷ்ணனின் ஒட்டுமொத்த வணிகப் பேரரசும் தற்போது அவரது இரண்டு மகள்களை உள்ளடக்கிய 'கிருஷ்ணன் குடும்ப வாரிசுகளிடம்' ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலகின் முன்னணி நிதி ஊடகமான ஃபோர்ப்ஸ் (Forbes) தகவல்களின்படி, அவரது மகள்களே தற்போதைய சொத்துக்களின் அதிகாரப்பூர்வ உரிமையாளர்கள் ஆவர். இவர்களில் மூத்த மகள் பிரான்ஸ் நாட்டில் ஒரு மருத்துவராகப் பணியாற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

மிகவும் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், பல்லாயிரக் கோடிக்கு அதிபதியாக இருந்தாலும், இவர்கள் ஊடக வெளிச்சத்தையோ, ஆடம்பர விழாக்களையோ அல்லது கார்ப்பரேட் விளம்பரங்களையோ விரும்புவதில்லை. தங்களின் தந்தையைப் போலவே மிகவும் ரகசியமான, தனிப்பட்ட வாழ்க்கையையே இன்றுவரை அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் புகைப்படங்கள் கூட இணையத்தில் எளிதாகக் கிடைக்காது என்பது இவர்களின் ரகசியத்தன்மைக்கு ஒரு சான்று.

ஆனந்த கிருஷ்ணன் தனது 'உசஹா தெகாஸ்' என்ற தனியார் முதலீட்டு நிறுவனத்தின் மூலமாகவே தனது அத்தனை வணிகங்களையும் கட்டுப்படுத்தி வந்தார். அந்த நிறுவனத்தின் வழியே அவரது வாரிசுகளுக்குச் சொத்துக்கள் சென்றடைந்துள்ளன.

"தலைவர் மறைந்தாலும், சாம்ராஜ்யம் வீழ்வதில்லை" என்ற கூற்றிற்கு ஏற்ப ஆனந்த கிருஷ்ணனின் நிறுவனங்கள் தற்போதும் எவ்விதத் தொய்வுமின்றி இயங்கி வருகின்றன. காரணம், ஆனந்த கிருஷ்ணன் ஒரு மிகச் சிறந்த தீர்க்கதரிசி. அவர் வாழும் போதே தனது நிறுவனங்களை ஒரு சாதாரண குடும்ப வணிகமாக நடத்தாமல், அனைத்துலக அளவில் தகுதி வாய்ந்த தொழில்முறை நிர்வாக அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தார்.

அதனால், அவரது வாரிசுகள் நிறுவனங்களின் பங்குகளை மட்டுமே தங்களின் வசம் வைத்துள்ளனர். அன்றாடத் தொழில் முடிவுகளைத் திறமையான கார்ப்பரேட் அதிகாரிகளே மேற்கொள்வதால், மலேசியப் பொருளாதாரத்தில் அவரது நிறுவனங்களின் ஆதிக்கம் இன்றும் வலுவாகவே தொடர்கிறது.

பணமும் புகழும் மட்டுமே வாழ்க்கையின் இறுதி இலக்கல்ல என்பதை உணர்த்திய துறவி மகன் ஒருபுறம், தந்தையின் சாம்ராஜ்யத்தை எவ்வித ஆரவாரமும் இன்றி அமைதியாகத் தாங்கி நிற்கும் மகள்கள் மறுபுறம் என ஆனந்த கிருஷ்ணனின் குடும்பக் கதை, ஒரு காவியத்திற்கு இணையான திருப்பங்களைக் கொண்டது.

எவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கினாலும், அதைத் திறம்படக் கொண்டுச் சேர்க்கும் முறையான கார்ப்பரேட் மேலாண்மைதான் ஒரு நிறுவனத்தை என்றும் அழியாமல் வைத்திருக்கும் என்பதற்கு டான் ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணனின் வணிக அமைப்பே ஒரு மிகச் சிறந்த உதாரணம்! உலகமே வியந்த அந்தத் தமிழனின் சாம்ராஜ்யம் இன்றும் அவரது வாரிசுகளின் நிழலில் கம்பீரமாகத் தொடர்கிறது.


Dato' AR
Home
About Dato'
News & Media
CONTACT US
YBhg. Dato' Anand Raja
DIMP, DSAP
FOUNDER AND GROUP CHIEF EXECUTIVE OFFICER – EURO GROUP (M) BERHAD
Entrepreneur, Philanthropist, and Visionary Corporate Leader.
As the Founder and Group Chief Executive Officer of Euro Group (M) Berhad, he has played a defining role in transforming the company's growth from a small local enterprise into a diversified conglomerate with interests in construction, engineering, logistics, and international business.
KNOW MORE
Events
Thaipusam 2026 – Euro Group Malaysia
Read More
Events
Vanakkam Malaysia 21st Anniversary
Read More
Globally Renowned University
News
MoU UiTM and Tektra Sdn Bhd
Read More
Events
17th Annual Edison Awards @ The Spice Arena, Penang
Read More
COMMUNITY AND PHILANTHROPY
Empowering Communities Through Compassion
Leading with purpose beyond profit, fostering education, healthcare, and inclusivity for lasting social progress.
Championing Social Responsibility
Beyond business success, Dato' Anand Raja believes true leadership is measured by the positive impact created in society.
Empowering Through Education
Education is the foundation for lasting progress and equal opportunity.
Advancing Healthcare and Community Welfare
Promoting access to quality healthcare and improving lives in underserved communities.
Building Inclusive and Sustainable Growth
Creating a future where equality, compassion, and opportunity thrive together.
EURO
EURO GROUP (M) BERHAD
TEKTRA SDN. BHD.
EURO RAILS (M) SDN. BHD.
VELLAKUTTY NADAR
Fresh Pick
VENUS
VENUS USED CAR TRADING
EURO Smart Tech
AR Earth Minerals Sdn. Bhd.

**மலேசியக் குற்றவியல் வரலாற்றில் மிகக் கொடூரமான, திட்டமிடப்பட்ட பழிவாங்கல் கொலைகளில் ஒன்றாக அரசு தரப்பு வழக்கறிஞர் டத்தோ கெவின் மொராயிஸின் கொலை வழக்கு கருதப்படுகிறது. இந்தச் சதியின் பின்னணியில் இருந்த சூத்திரதாரி முன்னாள் ராணுவ மருத்துவர் கர்னல் டாக்டர் ஆர். குணசேகரன் மற்றும் ஐந்து கூலிப் படையினரின் மரண தண்டனையை மலேசியக் கூட்டரசு நீதிமன்றம் அண்மையில் உறுதி செய்துள்ளது. ஓர் அரசு உயர் அதிகாரியைக் கொலை செய்யும் அளவுக்கு டாக்டர் குணசேகரனுக்கு இருந்த வஞ்சம் என்ன, அவரது பின்னணி என்ன என்பது பலரையும் அதிர வைக்கும் ஒரு நிழல் உலகக் கதையாகும்.**

# சிமெண்ட் பேரலுக்குள் சிதைந்த நீதி

63 வயது டாக்டர் ஆர். குணசேகரன் மலேசிய ஆயுதப் படையில் கர்னல் அந்தஸ்தில் இருந்த ஓர் உயர் ராணுவ மருத்துவர் ஆவார். கோலாலம்பூர், வங்சா மாஜுவில் உள்ள துங்கு மிஸான் ராணுவ மருத்துவமனையின் நோயியல் பிரிவின் தலைவராக அவர் பணியாற்றி வந்தார். மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வாங்கும் விவகாரத்தில், தன் பதவியைத் தவறாகப் பயன்படுத்தி ஊழல் செய்ததாக மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தால் குணசேகரன் மீது நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த ஊழல் வழக்கை மிகத் தீவிரமாக நடத்தி, குணசேகரனுக்குக் கடுமையான தண்டனை பெற்றுத் தரத் துடித்தவர்தான் ஊழல் தடுப்பு ஆணையத்தின் திறமையான அரசு தரப்பு வழக்கறிஞரான கெவின் மொராயிஸ். இந்த வழக்கில் குணசேகரன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவரது மருத்துவ வாழ்க்கை, ராணுவ அந்தஸ்து, ஓய்வூதியம் என அனைத்தும் பறி போகும் நிலை இருந்தது. தன் வாழ்வை அழிக்கத் துடிக்கும் கெவின் மொராயிஸை ஒழித்துக் கட்டினால் மட்டுமேதான் தப்பிக்க முடியும் என்று குணசேகரனின் மனதில் வஞ்சமும் வெறியும் குடியேறியது.

செப்டம்பர் 4, 2015 அன்று அதிகாலையில், கெவின் மொராயிஸ் தனது அதிகாரப்பூர்வ 'புரோட்டோன் பெர்டானா' காரில் கோலாலம்பூர், டூத்தாமாஸ் பகுதியில் உள்ள தனது குடியிருப்பில் இருந்து அலுவலகத்திற்குப் புறப்பட்டார். ஆனால் அவர், சட்டத்துறை அலுவலகத்திற்குச் சென்று சேரவில்லை; மர்மமான முறையில் காணாமல் போனார். அவரது தொலைபேசி எண்களும்



அணைக்கப்பட்டிருந்தன.

அடுத்த நாள், செப்டம்பர் 5 அன்று பேராக், ஊத்தாங் மெலிங்கான் பகுதியில் உள்ள ஒரு செம்பனைத் தோட்டத்திற்குள் கார் ஒன்று முழுமையாக எரிக்கப்பட்டுக் கிடப்பதாக போலீசாருக்குத் தகவல் கிடைத்தது. போலீசார் அங்கு சென்று ஆய்வு செய்த போது, அது கெவின் மொராயிஸின் புரோட்டோன் பெர்டானா கார் என்பது அடையாளம் காணப்பட்டது. காரின் சேசிஸ் எண் மற்றும் எஞ்சின் எண்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருந்தன. ரசாயனத் துறையின் ஆய்வில், விபத்தினால் கார் தீப்பற்றவில்லை என்றும், தடயங்களை முழுமையாக அழிப்பதற்காகவே பெட்ரோல் ஊற்றி கார் வேண்டுமென்றே எரிக்கப்பட்டுள்ளது என்பதும் உறுதி செய்யப்பட்டது.

கார் எரிக்கப்பட்ட விதம் இது ஒரு சாதாரண காணாமல் போன வழக்கு அல்ல, பெரும் சதித் திட்டம் என்பதைப் போலீசாருக்கு உணர்த்தியது. போலீசார் மிகத் தீவிரமான அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் புலனாய்வில் இறங்கினர். கெவின் மொராயிஸ் கடத்தப்பட்ட ஜாலான் டூத்தாமாஸ் ராயா பகுதியில் இருந்த சிசிடிவி கேமராக்களை போலீசார் ஆய்வு செய்தனர். அதில், ஒரு வாகனம் திட்டமிட்டு கெவினின் காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்துவதும், கார் சேதத்தை பார்க்க கெவின் கீழே இறங்கிய போது ஒரு கும்பல் அவரை வலுக்கட்டாயமாகக் கடத்திச் செல்வதும் தெளிவாகப்





பதிவாகியிருந்தது.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்களை வைத்துப் புலனாய்வு செய்ததில், பெட்டாலிங் ஜெயாவில் உள்ள இரு ஹோட்டல்களில் சந்தேகத்திற்குரிய நபர்கள் தங்கியிருந்தது சிசிடிவி மூலம் கண்டறியப்பட்டது.

தேடுதல் வேட்டையின் போது, பெட்டாலிங் ஜெயா, டேசா மெந்தரி பகுதியில் உள்ள ஒரு வாகனப் பழுது பார்க்கும் பட்டறையின் கழிவறைக் கதவில் சிறிய இரத்தக் கறையைப் போலீசார் கண்டெடுத்தனர். தடய அறிவியல் சோதனையில் அது கடத்தப்பட்ட கெவின் மொராயிஸின் இரத்தம் என்பது உறுதியானது.

இந்த வழக்கில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது, குணசேகரனின் சதியில் உடந்தையாக இருந்து பின்னர் அப்ரூவராக மாறிய ஜி. குணசேகரன் என்ற ஜேய் என்பவரின் வாக்குமூலம் ஆகும். அவரே போலீசாரை சுபாங் ஜெயாவில் உள்ள ஒரு சதுப்பு நிலக் கால்வாய்க்கு அழைத்துச் சென்றார். அங்கு சிமெண்ட் கலவை ஊற்றி நிரப்பப்பட்டிருந்த ஒரு இரும்புப் பேரலை போலீசார் மீட்டனர். அதனை உடைத்துப் பார்த்த போது உள்ளே மூச்சுத் திணறடிக்கப்பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடந்த கெவின் மொராயிஸின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட கூலிப் படையினர் கொடுத்த வாக்குமூலங்கள் மற்றும் டிஜிட்டல் ஆதாரங்கள் அனைத்தும், இந்த ஒட்டுமொத்தக் கொடூரச் சதிக்கும் பின்னால் இருந்து நிதியுதவி செய்து இயக்கியது டாக்டர் ஆர். குணசேகரன்தான் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தன. சமூகத்தில் பெரும் மரியாதைக்குரிய பதவியில் இருந்த ஒரு ராணுவ மருத்துவர், தன் மீதான ஊழல் வழக்கில் இருந்து தப்பிக்க, அரசு அதிகாரி ஒருவரைக் கடத்திக் கொலை செய்யக் கூலிப் படையைப் பயன்படுத்திய விதம் மலேசியாவையே உலுக்கியது. பல ஆண்டுகள் நீடித்த சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, உச்ச நீதிமன்றம் குணசேகரனுக்கு மரணத் தண்டனையை உறுதி செய்தது. மற்றவர்களுக்கு சிறைத் தண்டனை விதித்தது.



மியன்மாரின் ஜனநாயகக் குரலாகவும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான 81 வயது ஆங் சான் சூ கீ, கடந்த ஐந்து ஆண்டுகளில் முதன் முறையாக உலகிற்குத் தனது முகத்தைக் காட்டியுள்ளார். 2021-ஆம் ஆண்டு மியன்மார் ராணுவப் புரட்சிக்குப் பிறகு, வெளி உலகத் தொடர்பே இல்லாமல் வைக்கப்பட்டிருந்த அவர், தற்போது அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க அதிகாரியை நேரில் சந்தித்துள்ளார். “அவர் உயிரோடு இருக்கிறாரா?” என்று அஞ்சிய அவரது குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் இந்தச் சந்திப்பு ஒரு பெரும் நிம்மதியைத் தந்துள்ளது.

# ஐந்து ஆண்டு கால மௌனம் கலைந்தது:

## மீண்டும் உலக வெளிச்சத்திற்கு வந்த ஆங் சான் சூ கீ!














மியன்மாரின் தலைநகரான நைபிடாவில் உள்ள ஒரு மர வேலைப்பாடுகள் கொண்ட எளிய அறையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. இரண்டு நாற்காலிகள் மற்றும் ஒரு மேஜை மட்டுமே கொண்ட அந்த அறையில், செஞ்சிலுவைச் சங்கத்தின் மியன்மார் நாட்டுப் பிரதிநிதியான அர்னாட் டி பேக் என்பவரை சூ கீ சந்தித்துப் பேசினார்.

ராணுவ அரசாங்கம் வெளியிட்டுள்ள புகைப்படங்களில், அவர் பாரம்பரிய பர்மிய உடையில் அதிகாரியோடு கைகுலுக்குவதும், தனியாக அமர்ந்து பேசுவதும் பதிவாகியுள்ளது. சிறை வைக்கப்பட்டுள்ள நபர்களைப் பார்வையிடும் அனைத்துலக விதிமுறைகளின்படியே இந்தத் தனிப்பட்ட சந்திப்பு நடந்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

சூ கீயின் மகன் கிம் ஆரிஸ் மற்றும் உலக நாடுகள் பலவும் அவரது உடல்நிலை குறித்து பல காலமாக கவலை தெரிவித்து வந்தன. அவருக்கு இதயம், எலும்பு மற்றும் ஈறுகளில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்பட்ட நிலையில், ராணுவ அரசு அவரது "உயிர் வாழும் ஆதாரத்தை" நிரூபிக்க சில புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

அதில் ஒரு புகைப்படத்தில், துணிமணிகள் மற்றும் பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அவரது தங்குமிடத்தில், இளஞ்சிவப்பு நிற கேக் ஒன்றை அவர் வெட்டுவது போன்ற காட்சி உள்ளது. அந்த கேக்கின் மீது "பிறந்தநாள் வாழ்த்துகள் அத்தை சூ 19.6.2026" என்று எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த ஜூன் மாதம் அவர் தனது 81-வது பிறந்தநாளைக் கொண்டாடியது தெரிய வந்துள்ளது. 2021 ராணுவப் புரட்சிக்குப் பிறகு, மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடத்தப்பட்ட நீதிமன்ற விசாரணைகளில் சூ கீக்கு 33 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அது 27 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் நடந்த தேர்தலுக்குப் பிறகு, முன்னாள் ராணுவத் தளபதி மின் ஆங் ஹ்லைங் அதிபரானதைத் தொடர்ந்து, சூ கீயின் தண்டனையில் மேலும் ஆறில் ஒரு பங்கு குறைக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் சிறையிலிருந்து மாற்றப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இன்னும் 18 ஆண்டுகள் அவர் தண்டனைக் காலத்தைக் கழிக்க வேண்டியிருந்தாலும், அனைத்துலக அழுத்தங்கள் காரணமாக ராணுவம் இந்தச் சந்திப்பிற்கு அனுமதி அளித்துள்ளது.

கடந்த காலங்களில் மியன்மாரின் முந்தைய ராணுவ ஆட்சியில், யாங்கோனில் உள்ள இன்யா ஏரிக்கரையில் இருக்கும் தனது இல்லத்தில் சூ கீ கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது அந்த வீட்டின் இரும்பு வாயில்கள் மீது ஏறி நின்று, தனக்காகக் கூடி நின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அவர் ஆற்றிய உணர்ச்சிப்பூர்வமான உரைகள் உலக வரலாற்றில் அழியாதவை. தற்போது மீண்டும் ஒரு வீட்டுக் காவலில், அதே போன்றதொரு இரும்பு வாயில்களுக்குப் பின்னால் அவர் வைக்கப்பட்டிருந்தாலும், இந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகான தோற்றம் உலகிற்கு ஒரு செய்தியைச் சொல்கிறது *ஷ* மியன்மாரின் ஜனநாயகப் போராட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை!

# உடலுறுப்பு தானம்: செயலி இருக்கிறது... விழிப்புணர்வு எங்கே?








'உயிரற்ற உடலால்... மற்றுமோர் உயிர் வாழும்' என்பது மனிதநேயத்தின் உன்னதப் புள்ளி. மலேசியாவில் தற்போது 10,000-க்கும் மேற்பட்ட நோயாளிகள் மாற்று உறுப்பு கிடைக்காமல், தங்களின் அடுத்த கட்ட வாழ்க்கைக்கான மாற்றுப் பாதைக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால், நம் நாட்டில் உடலுறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதுதான் கசப்பான உண்மை.

முன்பெல்லாம் உடலுறுப்பு தானம் செய்ய வேண்டும் என்றால் பல படிவங்களை நிரப்ப வேண்டும். இப்போது 'MySejahtera' செயலி (App) மூலமாக மிக எளிதாக நம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும். தொழில்நுட்பம் இவ்வளவு எளிமையான பிறகும், புதிய பதிவுகளின் எண்ணிக்கை கடந்த 2024-ஆம் ஆண்டில் மட்டும் 45 விழுக்காடு சரிவடைந்துள்ளது (28,342-லிருந்து 15,461 ஆகக் குறைந்துள்ளது).

மலேசியாவில் ஒட்டுமொத்தமாக இதுவரை 4,24,333 பேர் மட்டுமே பதிவு செய்துள்ளனர். இது நம் நாட்டின் மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது மிக மிகக் குறைந்த எண்ணிக்கையாகும். உலக அளவில் ஸ்பெயின் நாடு ஒரு மில்லியன் மக்களுக்கு 52.56 பேர் என்ற வீதத்தில் முன்னணியில் உள்ளது. அண்டை நாடான சிங்கப்பூர் 4.67 ஆக இருக்கும் நிலையில், மலேசியாவின் வீதம் வெறும் 1.3 மட்டுமே!

இங்கு மற்றுமோர் அதிர்ச்சிகரமான தகவலும் உண்டு. உடலுறுப்பு தானம் செய்யத் தகுதியான சூழல் ஏற்படும் போது, சுமார் 90% நிகழ்வுகளில் குடும்பத்தினர் அதற்கு அனுமதி மறுத்து விடுகிறார்கள். ஒரு நபர் உயிருடன் இருக்கும் போது உறுப்பு தானம் செய்ய ஆசைப்பட்டாலும், அது பற்றி தன் குடும்பத்தாரிடம் பேசுவதில்லை. இதனால் ஏற்படும் மத மற்றும் கலாசார ரீதியான சந்தேகங்களே இந்தத் தடைக்கு முக்கியக் காரணம்.



**இந்தத் தேக்க நிலையை மாற்ற நாம் சில அதிரடிப் படிகளை எடுத்தாக வேண்டும்.**

* இணையத்தில் மட்டும் பிரச்சாரம் செய்யாமல், பொது இடங்கள், பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் மீண்டும் விழிப்புணர்வு முகாம்களைத் தீவிரப்படுத்த வேண்டும்.

* உடலுறுப்பு தானம் பற்றிய தவறான புரிதல்களை நீக்க, சமயத் தலைவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

* அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளைப் போல, ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பிக்கும் போது 'உடலுறுப்பு தானம் செய்ய விருப்பமா?' என்ற தேர்வைக் கொண்டு வரலாம்.

**'எப்படிப் பதிவு செய்வது?'** என்ற கேள்விக்கு 'MySejahtera' விடை கொடுத்து விட்டது. ஆனால், 'ஏன் செய்ய வேண்டும்?' என்ற கேள்விக்கான விடையை மக்களின் மனங்களில் விதைக்க வேண்டியது தற்போதைய அவசியத் தேவை!






# மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

Tuan Yang Terutama Tun Datuk Seri (Dr.)
Haji Mohd Ali bin Mohd Rustam,
Yang di-Pertua Negeri Melaka, அவர்களின்

**77ஆவது பிறந்த நாளை முன்னிட்டு**

Global Force Security Sdn Bhd,
DPP Trading Sdn Bhd,
இயக்குநர் டத்தோ டாக்டர்

## விஸ்வநாதன் @ விஸ்வா த/பெ ஆனந்தன் அவர்களுக்கு



**(D.P.S.M.)**
எனும் டத்தோ விருது
வழங்கி கௌரவிக்கப்பட்டதை முன்னிட்டு
மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.









ஜோகூர் மாநிலம், ச்சாஆ சிகாமாட்டில் பிறந்த டத்தோ டாக்டர் விஸ்வநாதன், தமிழ்ப்பள்ளியில் தனது கல்விப் பயணத்தைத் தொடங்கி, பின்னர் மேற்கல்வியைத் தொடர்ந்து முடித்தார்.

ஆரம்பத்தில் காப்புறுதி நிறுவன முகவராகப் பணியாற்றிய அவர், தனது கடின உழைப்பு, தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சியால் பின்னர் சொந்தமாக ஒரு பாதுகாப்புச் சேவை நிறுவனத்தைத் தொடங்கினார்.

தொடக்கக் காலத்தில் வெறும் 40 ஊழியர்களுடன் இயங்கத் தொடங்கிய அந்த நிறுவனம், இன்று 1,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வெற்றிகரமான நிறுவனமாக உயர்ந்துள்ளது.

தொழில் வெற்றியுடன் சமூகப் பொறுப்பையும் மறக்காத டத்தோ டாக்டர் விஸ்வநாதன், பல தமிழ்ப்பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு நன்கொடைகள் வழங்கி உதவிக்கரம் நீட்டியுள்ளார்.

ஆலயங்களுக்கும் ஆதரவற்ற இல்லங்களுக்கும் தொடர்ந்து பல்வேறு நிதி மற்றும் நல உதவிகளை வழங்கி வருகிறார்.

அவரது இந்த மகத்தான வெற்றிப் பயணத்தில், அன்புத் துணைவியார் டத்தின் புனிதா மற்றும் பிள்ளைகள் உறுதுணையாக இருந்து பக்கபலமாக விளங்கி வருகின்றனர்.

**“ உழைப்பால் உயர்ந்து, பலருக்கும் வாழ்வாதாரம் வழங்கி, சமூக சேவையிலும் தம்மை அர்ப்பணித்துள்ள டத்தோ டாக்டர் விஸ்வநாதன் அவர்களின் சாதனைப் பயணம் தொடர வேண்டும். ”**

**வாழ்த்துவோர்:**

| தொழிலதிபர் | தொழிலதிபர் | தொழிலதிபர் | தொழிலதிபர் |
|---|---|---|---|
| **ஆர். தமிழ்ச்செல்வம்** | **டி. பாலமுருகன்** | **டத்தோ என். குமரேஸ்** | **டாக்டர் எஸ். லிங்கேஸ்வரன்** |

# தேசிய நினைவுச் சின்னம்:

# கலைப் படைப்பா அல்லது அடையாளச் சிக்கலா?

இ.எம்.சாம்








மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூர், பூமலையில் கம்பீரமாக வீற்றிருக்கும் தேசிய நினைவுச் சின்னம், நாட்டின் சுதந்திரத்திற்காகவும் அமைதிக்காகவும் உயிர் நீத்த வீரர்களின் தியாகத்தைப் பறைசாற்றும் ஒரு புனிதமான இடமாகும். 1966-ஆம் ஆண்டு நம் நாட்டின் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தச் சிலைகள், புகழ் பெற்ற சிற்பி பெலிக்ஸ் டி வெல்டன் (Felix de Weldon) என்பவரால் வடிவமைக்கப்பட்டன. அமெரிக்காவின் 'இவோ ஜிமா' (Iwo Jima) நினைவுச் சின்னத்தை வடிவமைத்த அதே கலைஞர் என்பதால், இதன் வடிவமைப்பு உலகத் தரம் வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

அண்மையில் மலேசிய நாடாளுமன்றத்தில், பாஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்வைத்த வாதம் ஒரு புதிய விவாதத்தைக் கிளப்பியுள்ளது. அந்தச் சிலைகளில் உள்ள வீரர்களின் முகச் சாயல் மற்றும் உடலமைப்பு மலேசியர்களைப் பிரதிபலிக்கவில்லை என்றும், அவை மேற்கத்திய அல்லது ஐரோப்பிய வீரர்களின் தோற்றத்தைக் கொண்டிருப்பதாகவும் அவர் வாதிட்டார்.

ஒரு நாட்டின் தேசியச் சின்னம் என்பது அந்த நாட்டு மக்களின் முகத்தை, கலாச்சாரத்தை அப்படியே பிரதிபலிக்க வேண்டும் என்பதே அவரது வாதத்தின் சாராம்சம்.

இந்த வாதத்தில் உள்ள நியாயத்தை நாம் மறுப்பதற்கில்லை. எந்தவொரு கலைப் படைப்பும் அது சார்ந்த நிலப்பரப்பின் அடையாளத்தைச் சுமந்து நிற்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்ப்பது இயற்கை. 1960-களில் மலேசியாவில் இவ்வளவு பிரம்மாண்டமான வெண்கலச் சிலைகளை வடிக்கும் தொழில்நுட்பம் குறைவாக இருந்திருக்கலாம். அதனால் வெளிநாட்டு வல்லுநரை நாடியிருக்கலாம். ஆனால், இன்று தொழில்நுட்பம் வளர்ந்துள்ள நிலையில், நம் நாட்டின் வீரர்களை நம் நாட்டின் சாயலிலேயே பார்ப்பது இன்னும் கூடுதல் பெருமிதத்தைத் தரும் என்பது பலரின் கருத்தாக இருக்கிறது.



இருப்பினும், துங்கு அவர்கள் உருவாக்கிய இந்த வரலாற்றுச் சின்னத்தைப் பாதுகாப்பதிலும் ஒரு முக்கியக் காரணம் உள்ளது. இது வெறும் சிலைகள் மட்டுமல்ல; மலேசியா ஒரு சுதந்திர நாடாக உருவெடுத்த காலத்தின் வரலாற்று ஆவணம். ஒரு கலைப் படைப்பு என்பது அது உருவாக்கப்பட்ட காலத்தின் சாட்சியாகும்.





அந்தச் சிலைகளை மாற்றுவது என்பது வரலாற்றின் ஒரு பகுதியைச் சிதைப்பதற்குச் சமம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். துங்குவின் தொலைநோக்குப் பார்வையில் உருவான இந்தச் சின்னம், மலேசியாவின் பன்முகத்தன்மையையும், கம்யூனிசத்திற்கு எதிரான போராட்டத்தின் வெற்றியையும் குறிக்கிறது.


முடிவாக, முகச் சாயலை விட அந்தச் சிலைகள் சுமந்து நிற்கும் தியாகத்தின் மதிப்பு தான் முக்கியமானது. இருப்பினும், எதிர்காலத்தில் அமைக்கப்படும் நினைவுச் சின்னங்களில் மலேசியக் கலை நுணுக்கங்களுக்கும், நம் நாட்டு மக்களின் உருவ அடையாளங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளலாம். இருக்கும் சிலைகளைச் சிதைக்காமல் அவற்றைப் பாதுகாப்பதே அந்த வீரர்களுக்கும், துங்கு அவர்களுக்கும் நாம் செய்யும் உண்மையான மரியாதையாகும்.



# மலேசியாவின் புதிய மைல்கல்: 2028-க்குள் உள்ளூரிலேயே உற்பத்தியாகும் மனிதர்களுக்கான முதலாவது 'PCV13' தடுப்பூசி

**மலேசியா இறக்குமதி செய்யப்படும் தடுப்பூசிகளின் மீதான தனது தேவையைக் குறைத்து, நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மெகா திட்டத்தைக் கையில் எடுத்துள்ளது. சீன நிறுவனத்திடமிருந்து பெறப்படும் தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் மூலம், மலேசியா தனது சொந்த மண்ணிலேயே மனிதர்களுக்கான முதலாவது தடுப்பூசியை வரும் 2028 ஆம் ஆண்டிலேயே உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது.**






அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துறை அமைச்சர் டத்தோ சாங் லி காங் வழங்கிய பிரத்தியேகத் தகவலின்படி, மலேசியாவின் ஃபார்மானியாகா நிறுவனம் இந்த உள்நாட்டுத் தடுப்பூசி தயாரிப்பில் நேரடியாகக் களமிறங்கியுள்ளது. கோவிட்-19 பெருந்தொற்று காலத்தின் போது பிற நாடுகளையே தடுப்பூசிக்கு நம்பியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டதால், எதிர்கால சுகாதார நெருக்கடிகளைத் தன்னாட்சியோடு எதிர்கொள்ள இந்த உத்திசார்ந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.


மலேசியாவில் உள்ளூரிலேயே முதன்முதலாகத் தயாரிக்கப்படவிருக்கும் இந்த 'PCV13' (Pneumococcal Conjugate Vaccine) என்பது, Streptococcus pneumoniae என்ற பாக்டீரியாவால் ஏற்படும் 13 வகையான தொற்றுகளிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்கும் ஒரு முக்கிய உட்செலுத்தலாகும். இது குறிப்பாகக் கடுமையான நிமோனியா, மூளைக் காய்ச்சல், செப்சிஸ் எனப்படும் குருதி நச்சு மற்றும் தீவிரமான காது, சைனஸ் தொற்றுகள் போன்ற அபாயகரமான நோய்களிலிருந்து பாதுகாப்பளிக்கிறது.

சுகாதார அமைச்சின் தேசிய நோய் எதிர்ப்புத் திட்டத்தின் கீழ், கடந்த 2020 டிசம்பர் 1 முதல் இந்த ஞஊஏ தடுப்பூசி அரசாங்க மருத்துவமனைகளில் ஜனவரி 1, 2020 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இது குழந்தைகளுக்கு மூன்று தவணைகளாக (4-வது மாதம், 6-வது மாதம் மற்றும் 15-வது மாதத்தில் பூஸ்டர் டோஸ்) போடப்படுகிறது. மேலும், முதியவர்கள், நாள்பட்ட உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள் மற்றும் புகை பிடிப்பவர்களுக்கும் இத்தடுப்பூசி மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. மலேசிய மருத்துவச் சங்கத்தின் தலைவர் டத்தோ டாக்டர் திருநாவுக்கரசு ராஜு மற்றும் வைராலஜிஸ்ட் பேராசிரியர் டத்தோ டாக்டர் லாம் சாய் கிட் உள்ளிட்ட மருத்துவ வல்லுநர்கள் இந்தத் திட்டத்தைப் பெரிதும் வரவேற்றுள்ளனர். ஆரம்பக் கட்டத்தில் இந்த உள்நாட்டு உற்பத்தி உடனடியாகத் தடுப்பூசிகளின் விலையைக் குறைத்துவிடாது என்றாலும், நீண்ட கால அடிப்படையில் நாட்டின் உள்கட்டமைப்புக்கும், அவசரக் காலங்களில் தடையின்றி மருந்து விநியோகம் கிடைப்பதற்கும் இது பெரிதும் உதவும். மலேசியா இந்தத் தொழில்நுட்பத்தை இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் போன்ற வளர்ந்து வரும் நாடுகளைப் பார்த்துத் தங்களுக்கு ஏற் பக் கற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த PCV13 தடுப்பூசியைத் தொடர்ந்து, குழந்தைகளுக்கான ஹெக்ஸாவலண்ட் (Hexavalent) தடுப்பூசி உட்பட மேலும் இரண்டு தடுப்பூசி மேம்பாட்டுப் பணிகளிலும் மலேசியா தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதன் மூலம் 2030-ஆம் ஆண்டிற்குள் மனிதர்களுக்கான அனைத்து அத்தியாவசியத் தடுப்பூசிகளையும் முழுமையாக மலேசியாவிலேயே தயாரிக்கும் இலக்கை நோக்கி நாடு வெற்றிகரமாக முன்னேறி வருகிறது.











## பூலாவ் ஜெரஜாக்:

### சுற்றுச்சூழல் சுற்றுலாத் தீவாக மாறும்

# வரலாற்றுப் பரிணாமம்



பினாங்கு மாநிலத்தின் தென்கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க புலாவ் ஜெரஜாக் தீவு, தற்போது ஒரு பிரம்மாண்ட புதிய மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. பினாங்கு முக்கியத் தீவின் குவீன்ஸ்பே மால் பகுதியிலிருந்து இத்தீவை இணைக்கும் வகையிலான முதல் நிரந்தர 4-வழிப் பாலம் கட்டும் பணிகள் 2025 மே மாதம் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

பினாங்கு உள்கட்டமைப்பு குழுத் தலைவர் ஜைரில் கிர் ஜொஹாரி வெளியிட்டுள்ள தகவலின்படி, தனியார் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் இந்த 500 மில்லியன் ரிங்கிட் மதிப்பிலான மெகா திட்டம், 1 கிமீ நீளமுள்ள பாலம் மற்றும் 4 கிமீ இணைப்புச் சாலைகளுடன் 2029 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்குள் (ஜூலை 31, 2029) முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன உள்கட்டமைப்பை நோக்கி நகரும் இத்தீவு, 19-ஆம் நூற்றாண்டு முதல் கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த ஓர் இருண்ட வரலாற்றைக் கொண்டிருந்தது. 1868-இல் பிரிட்டிஷ் ஆட்சியில் தொழுநோயாளிகளைத் தனிமைப்படுத்தும் முகாமாகத் தொடங்கப்பட்ட இத்தீவு, பின்னர் மலாயாவிற்குள் நுழைந்த சீன, இந்தியத் தொழிலாளர்களின் நோய்-தடுப்பு எல்லை முகாமாகவும் செயல்பட்டது.

குறிப்பாக, 1969 இனக் கலவரத்திற்குப் பிறகு, மிகக் கொடூரமான குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை அடைத்து வைக்கும் உயர் பாதுகாப்பு சிறைச்சாலையாக மாற்றப்பட்டதால், இது "மலேசியாவின் அல்காட்ராஸ்" என்று அழைக்கப்பட்டது. 1993-இல் இந்த சிறைச்சாலை மூடப்பட்டதைத் தொடர்ந்து தீவு தனித்து விடப்பட்டது.

தற்போது ஐடியல் பிராபர்ட்டி மற்றும் டிராபிகல் ஐலண்ட் ரிசார்ட் நிறுவனங்களால் மறுமேம்பாடு செய்யப்படும் இத்திட்டம், தீவின் ஒட்டுமொத்தப் பரப்பளவான 360 ஹெக்டேரில், 32 ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே இயற்கை மாறாமல் சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக வடிவமைக்கப்பட்டு வருகிறது. தீவின் பசுமையைப் பாதுகாக்கும் நோக்கில், புதிய பாலம் முக்கியமாக பாதசாரிகள், மிதிவண்டிகள் மற்றும் மின்சார வாகனங்கள் செல்வதற்காகவே பிரத்தியேகமாக உருவாக்கப்படுகிறது; வழக்கமான பெட்ரோல், டீசல் வாகனங்கள் செல்ல சிறப்பு அனுமதி அவசியமாகும். ஒருகாலத்தில் மக்கள் செல்ல அஞ்சிய கைதிகளின் தீவு, விரைவில் சொகுசு குடியிருப்புகள், ஹோட்டல்கள், முகாம்கள் மற்றும் மலையேற்றப் பாதைகளைக் கொண்ட பினாங்கின் மிக முக்கிய சுற்றுலா சொர்க்கமாக உருவெடுக்கவுள்ளது. இந்த பிரம்மாண்டமான உள்கட்டமைப்பு மற்றும் மறுமேம்பாட்டுப் பணிகள் பினாங்கு மாநிலத்தின் பொருளாதாரத்திலும், உள்ளூர் மக்களுக்கான வேலை வாய்ப்புகளிலும் ஒரு பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுமானத் துறை மட்டுமின்றி, எதிர்காலத்தில் இங்கு அமையவிருக்கும் ஹோட்டல்கள், வணிக வளாகங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா சார்ந்த தொழில்கள் மூலம் ஆயிரக்கணக்கான புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். இது பினாங்கின் சுற்றுலாத் துறையை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுச் செல்வதோடு, மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு முக்கிய உந்துசக்தியாகத் திகழும்.

அதே வேளையில், இத்தீவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், அடர்ந்த மழைக் காடுகளையும் தற்போதைய நவீன மயமாக்கல் பாதிக்காத வண்ணம் பாதுகாப்பது மிகப் பெரிய சவாலாகும். இதைக் கருத்தில் கொண்டே, தீவுக்குள் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த மின்சார வாகனங்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கும் பசுமைப் போக்குவரத்துத் திட்டம் பாலத்தில் அமல்படுத்தப்படுகிறது.

கடந்த காலத்தின் இருண்ட நினைவுகளைத் தாங்கி நிற்கும் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்து, எதிர்காலத் தலைமுறைக்கான நவீன சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக மாற்றுவதன் மூலம் பூலாவ் ஜெரஜாக் தீவு உலகப் பிரசித்தி பெற்ற ஒரு முன்மாதிரித் தீவாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.



# தலைமுறை கடந்த பூமலை ரகசியம்:



## காட்டின் நடுவே வீற்றிருக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரியின்

# அற்புதம்

கோலாலம்பூர் மாநகரின் பரபரப்பான மையப் பகுதியில், பசுமைப் போர்வையாய் வீற்றிருக்கும் 'பூமலை' (Taman Tugu) குன்றுப் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மாரியம்மன் ஆலயம். மலேசியாவின் தேசிய நினைவுச் சின்னத்திற்கு மிக அருகில், அடர்ந்த மரங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த ஆலயம், வெறும் வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல; கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்நாட்டின் வளர்ச்சிக்கு உழைத்த தமிழ் முன்னோர்களின் வியர்வையையும், அவர்களின் ஆன்மீகப் பாரம்பரியத்தையும் பறைசாற்றும் ஒரு வரலாற்றுச் சான்றாகும்.



பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கோலாலம்பூர் நகராண்மைக் கழகத்திலும் (Kuala Lumpur Municipality – இன்றைய DBKL), தாவரவியல் பூங்கா (Botanical Garden/ Lake Gardens) உருவாக்கப் பணிகளுக்காக எண்ணற்ற தமிழ் ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டனர். தங்களின் கடின உழைப்புக்கு மத்தியிலும், ஆன்மீக பலம் பெற விரும்பிய அந்தத் தோட்டத் தொழிலாளர்கள், ஒரு பெரிய அரச மரத்தின் அடியில் தங்களின் வழிபாட்டைத் தொடங்கினர்.

அன்னை மாரியம்மனை, உலகைக் காக்கும் வடிவாக எண்ணி "ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மாரியம்மன்" என்று பெயரிட்டு, ஒரு சிறிய பலகை மற்றும் துத்தநாகக் கூரையுடன் கூடிய வழிபாட்டு இடமாக இதனை நிறுவினர். இந்தப் பூமலையை அழகுபடுத்திய கைகள், தங்களின் ஆன்மீக தாகத்திற்காக உருவாக்கியதே இந்த ஆலயமாகும்.

கடந்த 2016-2017 காலகட்டத்தில், அரசாங்கம் துகு நெகாரா பகுதியைச் சுற்றியுள்ள 66 ஏக்கர் இயற்கை வனப் பகுதியை உலகத்தரம் வாய்ந்த பசுமைப் போர்வையாக மாற்றும் "தாமான் துகு" என்ற பிரம்மாண்ட திட்டத்தை முன்னெடுத்தது. பூங்காவின் மேம்பாட்டுப் பணிகளுக்காக, காட்டின் நடுவே இருந்த இந்த பழமையான மாரியம்மன் ஆலயத்தை அங்கிருந்து அகற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அப்போது, மலேசிய இந்திய சமூகத்தின் ஆன்மீக மற்றும் வரலாற்றுப் பாரம்பரியத்தை மதித்து, முன்னாள் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜீப் துன் ரசாக் அவர்கள் இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டார். ஆலயத்தை முழுமையாக அகற்றுவதற்குப் பதிலாக, அதே பூமலை (தாமான் துகு) வளாகத்திற்குள்ளேயே, மற்றொரு பாதுகாப்பான மற்றும் பொருத்தமான நிலத்தை ஆலய நிர்வாகத்திற்கு அவர் அதிகாரப்பூர்வமாக ஒதுக்கீடு செய்து தந்தார். அரசாங்கத்தின் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு நடவடிக்கையால், ஆலயத்தின் நூறாண்டு கால வரலாறு காப்பாற்றப்பட்டது.

இந்த ஆலயம் கோலாலம்பூர் மாநகரின் இதயம் போன்ற பகுதியில் இருந்தாலும், முற்றிலும் காடுகளால் சூழப்பட்ட ஒரு தனித்துவமான அமைவிடத்தைக் கொண்டுள்ளது. நாடாளுமன்றத்திற்குச் செல்லும் ஜாலான் பார்லிமெண்ட் அருகில் உள்ள ஜாலான் சுல்தான் சலாஹுதீன் வழித்தடத்தில், தாமான் துகு பசுமை வனம் மற்றும் தேசிய நினைவுச் சின்னத்தின் வாகன நிறுத்துமிடத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது.

பரபரப்பான நெடுஞ்சாலைகளுக்கு மத்தியில் சுமார் 4,000-க்கும் மேற்பட்ட உள்ளூர் காட்டு மரங்கள், மூலிகைச் செடிகள் நிறைந்த அடர்ந்த வனப் பகுதியின் நடுவே இந்த ஆலயம் வீற்றிருக்கிறது. Taman Tugu Nursery அல்லது துகு நெகாரா வாகன நிறுத்துமிடத்தில்









காரை நிறுத்தி விட்டு, பசுமையான காட்டுப் பாதையின் இயற்கை அழகை ரசித்தபடி இந்த ஆலயத்தை எளிதாக அடையலாம்.

தற்போது, இந்த ஆலயம் நவீன கோலாலம்பூர் மாநகரத்தின் நடுவே ஓர் 'இயற்கை ஆன்மீகச் சோலையாக' திகழ்கிறது. சுற்றிலும் அடர்ந்த மரங்களின் நிழல், பறவைகளின் கிதாரி ஓசை எனத் தூய்மையான இயற்கைக் காட்டின் மத்தியில் அமைதியான ஆன்மீக அதிர்வுகளுடன் அன்னை அகிலாண்டேஸ்வரி மாரியம்மன் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

தேசிய நினைவுச் சின்னம் மற்றும் தாமான் துகு பூங்காவின் இயற்கைப் பாதைகளில் மலையேற்றம் (Hiking/Walking) செய்ய வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க காட்டுக் கோவிலைக் கண்டு வியந்து, மலேசியத் தமிழர்களின் கலாச்சாரத்தையும் வழிபாட்டு முறைகளையும் அறிந்து செல்கின்றனர்.

நம் முன்னோர்கள் காடுகளையும் மலைகளையும் திருத்தி, இந்நாட்டை உருவாக்கிய போது தங்களின் அடையாளமாக நட்ட வழிபாட்டுத் தலங்கள் இன்று வரலாற்றுப் பொக்கிஷங்களாக மாறி நிற்கின்றன. அரசாங்க அமைப்புகளின் அங்கீகாரத்தோடும், நாட்டின் தலைவர்களின் ஆதரவோடும் பாதுகாப்பாய் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மாரியம்மன் ஆலயத்தின் வரலாற்றையும் அதன் துல்லியமான அமைவிடத்தையும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வது அவசியம்.

விடுமுறை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் இந்த வரலாற்றுப் பூமலை ஆலயத்திற்கு நேரில் சென்று தரிசிப்பதோடு, நம் முன்னோர்களின் உழைப்பையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது நமது கடமையாகும்.

# காலம் கடந்த அஞ்சலகம்: கோலாலம்பூரின் புதிய பாரம்பரியப் புரட்சி

**மலேசியத் தலைநகர் கோலாலம்பூரின் இதயப் பகுதியில், பழமையும் புதுமையும் கைகோர்க்கும் ஒரு வரலாற்றுப் புரட்சி அரங்கேறியுள்ளது. கசானா நேஷனல் நிறுவனத்தின் நிதி உதவியுடன், டானா வாரிசான் திட்டத்தின் கீழ் கோலாலம்பூரின் முதன்மை அடையாளங்களில் ஒன்றான பழைய பொது அஞ்சலகம் மீண்டும் புதுப் பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளது.**



வெறும் போக்குவரத்து மையமாக மட்டுமே பார்க்கப்பட்ட கோலாலம்பூரை, உலகத்தரம் வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றும் நோக்கில் இந்த வரலாற்று மீட்புப் பணி சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கக் கட்டிடம் 1902-இல் அப்போதைய பொதுப்பணித்துறையின் உதவிக் கட்டிடக் கலைஞர் ஆர்தர் பெனிசன் ஹப்பாக் என்பவரால் வடிவமைக்கப்பட்டு, 1907 ஜுலையில் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது.

20-ஆம் நூற்றாண்டு முழுவதும் இது பொது அஞ்சல் கவுண்டர்கள், தந்திச் சேவைகள், சேமிப்பு வங்கி எனப் பொதுமக்களின் முதன்மைத் தொடர்பு மையமாக விளங்கியது.

1980-களில் அஞ்சல் சேவைகள் டாயாபூமி வளாகத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, 1990 முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் உள்ளிட்ட நீதித்துறைப் பணிகளுக்காக இக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டது. 2007-இல் அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குப் பிறகு, கசானாவின் கீழ் செயல்படும் அசெட் வாரிசான் எம்பாட் வசம் ஒப்படைக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதம் முதல் தீவிரப் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் துறையின் கூட்டரசு பிரதேசத்திற்கான அமைச்சர் ஹன்னா இயோ மற்றும் கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோ ஸ்ரீ ஃபத்லூன் மாக் உஜுத் ஆகியோரின் முன்னிலையில் இந்த வளாகம் 2026 மே 23 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. கசானாவின் நிர்வாக இயக்குநர் டத்தோ அமிருல் ஃபைசல் வான் ஜாஹிர் அவர்களின் கூற்றுப்படி, இது வெறும் கட்டிட மறுசீரமைப்பு மட்டுமல்ல; மலேசியாவின் கலாச்சார அடையாளத்தை வலுப்படுத்தும் வணிக ரீதியிலான ஒரு நிலையான முயற்சி ஆகும். யுனெஸ்கோ அங்கீகரித்த மலேசியாவின் பாரம்பரிய உணவுக் கலாச்சாரத்தை மையமாகக் கொண்டு, தற்காலத் தலைமுறையினரைக் கவரும் வகையில் இந்த வளாகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



தற்போது இந்த மறுசீரமைக்கப்பட்ட வளாகத்தில் நிகோ நெகோ (Niko Neko), ஏ பீஸ் ஆஃப் மலேசியா (A Piece of Malaysia), ஓரியண்டல் கோபி (Oriental Kopi), டானின் ஹில் (Tannin Hill), பங்லோ 289 (Banglo 289), சவ்டாகார் (Saudagar), ருவாய் (Ruai) மற்றும் கொங்சி கிரியேட்டிவ் (Kongsi Kreatif) ஆகிய 8 உள்ளூர் பிராண்டுகள் தங்களின் கிளைகளைத் தொடங்கியுள்ளன.

இந்தத் திறப்பு விழாவையொட்டி, "மலேசியாவிற்கான கடிதங்கள்" (Letters to Malaysia) என்ற நெகிழ்ச்சியான பிரச்சாரமும் தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களின் கைகளால் எழுதிய அஞ்சல் அட்டைகள் மூலமாகவோ அல்லது இணையப்பக்கம் வழியாகவோ நாட்டின் மீதான தங்களின் நினைவுகளையும், எதிர்காலக் கனவுகளையும் பகிர்ந்து கொள்ளலாம். ஜுலை 31 வரை நீடிக்கும் இச்சேகரிப்புகள், வரவிருக்கும் மெர்டேகா மற்றும் மலேசியத் திருநாள் கொண்டாட்டங்களின் போது ஆவணப்படங்களாகவும் குறுகிய காணொளிகளாகவும் வெளியிடப்படவுள்ளன.



பழைய பொது அஞ்சலகத்தின் இந்த மறுமலர்ச்சி, மலேசியாவின் பாரம்பரியப் பாதுகாப்பில் ஒரு புதிய மைல்கல் ஆகும். கசானாவின் 600 மில்லியன் ரிங்கிட் மதிப்பிலான வாரிசான் கோலாலம்பூர் திட்டத்தின் கீழ், ஏற்கனவே சுல்தான் அப்துல் சமாட் கட்டிடத்தின் முதல் தொகுதி மற்றும் ஸ்ரீ நெகாரா கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சின்னங்களை இடித்து விட்டு நவீனக் கோபுரங்களை எழுப்பும் இன்றைய காலகட்டத்தில், பழமையின் ஆன்மா மாறாமல், அதனை இன்றைய வணிகத் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. இது உள்ளூர் வணிகங்களை ஊக்குவிப்பதோடு, சுற்றுலாப் பயணிகளைத் தலைநகரில் அதிக நேரம் செலவிடத் தூண்டும். காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும் இந்த வளாகம், வரலாற்றை நேசிக்கும் ஒவ்வொரு மலேசியனும், சுற்றுலாப் பயணியும் வாழ்நாளில் ஒருமுறையாவது சென்று ரசிக்க வேண்டிய புதிய கலாச்சாரக் கூடாரமாகும்.







# முகமூடி மனிதனுடன் என் நான்கு மாத நரக வாழ்க்கை:

## ஒரு பெண்ணின் நெஞ்சை உலுக்கும் வாக்குமூலம்

பரவசமும் கனவுகளும் நிறைந்த எந்தவொரு சராசரிப் பெண்ணையும் போலத்தான் என் திருமண வாழ்வும் தொடங்கியது. எனக்குச் சரியாகத் தெரியாத, அறிமுகமில்லாத ஒருவரை அசாத்திய நம்பிக்கையுடன் கரம் பிடித்தேன். நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, திருமணத்திற்குப் பிறகு என் கணவருடன் ஓர் அழகான தேனிலவு செல்ல வேண்டும், மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற ஆசைகள் மட்டுமே இருந்தன. ஆனால், திருமணமான முதல் இரவன்றே என் கனவுகளில் விரிசல் விழத் தொடங்கியது. எங்கள் வீட்டில் நிலவிய இட நெருக்கடியைக் காரணம் காட்டி, முதல் இரவிலேயே எங்களைத் தனித்தனி அறைகளில் தூங்க வைத்தனர்.

மறுநாள் காலையில், நாங்கள் திட்டமிட்டிருந்த கேமரன் ஹைலேண்ட்ஸ் தேனிலவுப் பயணத்தை, தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி என் கணவர் திடீரென ரத்து செய்தார். சமையலறையில் எனக்கு உதவுவது, வீட்டு வேலைகளைப் பகிர்வது என வெளிப்பார்வைக்கு அவர் ஒரு தங்கமான மனிதராகவே தெரிந்தாலும், படுக்கையறை என்று வந்து விட்டால் அவரிடம் ஒரு மர்மமான விலகல் இருந்தது.

எங்களுக்குள் எந்தவொரு தாம்பத்திய உறவோ, உடலளவிலான நெருக்கமோ ஒருமுறை கூட ஏற்படவில்லை. என் மனதில் எழுந்த தனிமையும் ஏமாற்றமும் என்னை உலுக்கின. இது குறித்து நான் அவரிடம் கேட்ட போதெல்லாம், "நான் உன்னை உயிராக நேசிக்கிறேன்" என்று கூறி என் கேள்விகளை மழுப்பினார். ஆனால், அடுத்த சில நாட்களிலேயே அவரது குடிப் பழக்கமும், நள்ளிரவு தாண்டிய பார்ப் பயணங்களும் அதிகரித்தன. என் துணிகளை நான் அடுக்கி வைக்கும் வரிசையில் ஏதோ மாற்றம் இருப்பதையும், என் உதட்டுச் சாயங்கள் மற்றும் வளையல்கள் அடிக்கடி காணாமல் போவதையும் கவனிக்கத் தொடங்கினேன்.

ஒருநாள், சந்தேகங்களின் உச்சக் கட்டமாக நான் வேலைக்குச் செல்வது போலக் காட்டி விட்டு, மதியம் திடீரென வீட்டிற்குத் திரும்பினேன்.



கதவு உட்புறமாகப் பூட்டப்பட்டிருந்ததால், ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தேன். என் கண்கள் கண்ட காட்சியை என் மூளையால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை; உடல் நடுங்கியது. என் கணவர், என்னுடைய பட்டுப் புடவையை உடுத்தி, முகத்தில் அடர்த்தியாக ஒப்பனை செய்து, தலையில் பெண்களைப் போல செயற்கை முடியை மாட்டிக் கொண்டு, அந்த விசித்திரமான கோலத்தில் லேப்டாப் கேமரா மூலம் யாருக்கோ போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்!

அவர் வெளியில் சென்ற ஒரு நள்ளிரவில், அவரது லேப்டாப்பை நான் ரகசியமாகத் திறந்து சோதித்தேன். அதில் 'சாரு' என்ற பெயரில் ஒரு ரகசியக் கோப்பு இருந்தது. அதைத் திறந்த போதுதான் என் கணவர் ஓர் ஓரினச் சேர்க்கையாளர் (முயல) என்ற அதிர்ச்சி உண்மை எனக்குத் தெரிந்தது. அவர் முகநூலில் இருந்து வெளியேறாமல் விட்டிருந்த கணக்கை ஆராய்ந்த போது, அவரது நண்பர்கள் அனைவரும் ஆண்களாக இருப்பதும், அவர்களுடன் அவர் பேசிய ஆபாச உரையாடல்களும் வெளிச்சத்திற்கு வந்தன. நான் கட்டியிருந்த தாலி, வெறும் நான்கு மாதங்களில் அதன் புனிதத்தை இழந்து நிற்பதை உணர்ந்து கதறி அழுதேன்.

மறுநாள் இரவு குடித்து விட்டு வந்த அவரிடம் இந்த ஆதாரங்களைக் காட்டி நான் நியாயம் கேட்ட போது, அவரது முகமூடி கழன்றது. அதுவரை சாதுவாக நடித்த மனிதன், ஆத்திரமடைந்து என்னைக் கொடூரமாக அடித்துத் துன்புறுத்தினான். அதை விடக் கொடுமை, அவனது குடும்பத்தினரை வரவழைத்துப் பேசிய போது, அவனது இந்த விசித்திர குணம் அவர்களுக்கு ஏற்கனவே தெரியும் என்பதும், "திருமணத்திற்குப் பிறகு அவன் மாறி விடுவான்" என்று நம்பி ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பகடைக்காயாக்கியதும் எனக்குப் புரிந்தது. என் பெற்ற தாயின் ஆதரவோடு, அந்த நரகக் கூண்டிலிருந்து உடனடியாக வெளியேறி, சட்டப்பூர்வமாக விவாகரத்து பெற்றேன்.

இன்று நான் எல்லாவற்றிலிருந்தும் மீண்டு வந்து விட்டேன். ஓர் உண்மையான நல்ல மனிதரை மறுமணம் செய்து கொண்டு என் வாழ்வில் நான் நிம்மதியாக வாழ்கிறேன். ஆனால், என்னைப் போன்ற மாற்றுத் திறனுடைய உறவுகளிலோ அல்லது சமூகச் சூழலிலோ வாழும் ஆண்களுக்கு நான் வைக்க விரும்பும் ஒற்றைக் கோரிக்கை இதுதான். தங்களின் உண்மையான பாலியல் விருப்பங்களை மறைத்து, சமூகத்திற்காகப் பொய் சொல்லி மற்றொரு பெண்ணின் வாழ்க்கையை தயவு செய்து சிதைக்காதீர்கள். மறைக்காமல் உண்மையாக இருங்கள். அது உங்களையும் காப்பாற்றும், உங்களை நம்பி வரும் பெண்ணையும் காப்பாற்றும்!

**பாதிக்கப்பட்ட பெண்**
**திவ்யா, கோலாலம்பூர்**





# சபாவின் சுவடுகள்: சுற்றுலாத்துறையைக் கையில் எடுக்கும் இயற்கைச் சொர்க்கம்

**போர்னியோ தீவின் கிழக்கு முனையில், பனிமூட்டக் காடுகளும் பிக்பி யானைகளும் கொஞ்சும் ஒரு தேசம் இருக்கிறது. அதுதான் சபா. இன்று மலேசியாவின் இந்த இயற்கைச் சொர்க்கம், உலகச் சுற்றுலா வரைபடத்தில் ஒரு புதிய புரட்சிக்குத் தயாராகி வருகிறது. "எங்கள் ஊர் அழகு... அதை எப்படி ரசிக்க வேண்டும் என்று எங்களுக்குத்தான் தெரியும்!" என கோலாலம்பூரை நோக்கி மெல்லக் குரல் எழுப்பத் தொடங்கியிருக்கிறது சபா மாநில அரசு! சமீபத்தில் நடந்த ஒரு முக்கியக் கூட்டத்தில், சபாவின் சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டத்தோ ஜெப்ரி அரிஃபின் ஓர் அதிரடிப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார்.**

'மலேசிய ஒப்பந்தம் 1963' (MA63) விதிகளின்படி, சபாவின் சுற்றுலாத்துறையை முழுமையாக நிர்வகிக்கும் அதிகாரம் அந்த மாநிலத்திற்கே வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அந்த சூடான செய்தி.

இது ஏதோ அரசாங்கக் கோப்புகளுக்குள் நடக்கும் சண்டை என்று நினைத்து விட வேண்டாம். இதன் பின்னணியில், சபாவிற்கு வரும் உலகப் பயணிகளுக்குக் கிடைக்கப் போகும் 'அல்டிமேட்' அனுபவங்கள் ஒளிந்திருக்கின்றன. சபா, கினபாத்தாங்கான் நதிக்கரையில் அமர்ந்து ஒராங் ஊத்தான்களையும், குள்ள யானைகளையும் ரசிப்பது ஒரு தனி சுகம். இந்த இயற்கை வளங்களை இன்னும் தீவிரமாகப் பாதுகாக்க சபா அரசு புதிய திட்டங்களைத் தீட்டுகிறது.



'சுற்றுலா நிலைத்தன்மைக் கட்டணம்' போன்ற புதிய முறைகள் மூலம், வசூலாகும் நிதி நேரடியாகக் காடுகளையும் தீவுகளையும் பராமரிக்கவே பயன்படுத்தப்படும். பழங்குடியின மக்களின் வாழ்வியலையும், பாரம்பரிய கலைகளையும் உலகிற்கு இன்னும் நெருக்கமாகக் கொண்டு சேர்க்கப் போகிறார்கள்.

"நாங்கள் மலேசியாவை விட்டுத் தனியாகப் போகக் கேட்கவில்லை; எங்களுக்கென்று இருக்கும் தனித்துவமான நிலப்பரப்பு, தீவுகள், கலாச்சாரத்திற்கு ஏற்ப நாங்களே சட்டங்களை இயற்றிக் கொள்ள விரும்புகிறோம்" என்று அமைச்சர் டத்தோ ஜெப்ரி தெளிவாகக் கூறியுள்ளார்.

கூட்டரசு அரசாங்கத்துடன் கைகோர்த்துக் கொண்டு, உலகப் பயணிகளுக்கு இன்னும் பாதுகாப்பான, நேர்த்தியான மற்றும் மறக்க முடியாத உல்லாசப் பயண அனுபவத்தை வழங்க சபா தன் கதவுகளை அகலத் திறந்து வைக்கிறது.





# 30 வயதிற்குப் பிறகு ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய 15 முக்கிய அழகு ரகசியங்கள்



## சருமப் பராமரிப்புக்கான அத்தியாவசியக் குறிப்புகள்

தண்ணீர் அருந்துவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். அதிகப்படியான தண்ணீர் குடிப்பது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு மட்டுமல்லாமல், சருமத்தையும் பொலிவாக்கும். இது சருமம் வறண்டு போவதைத் தவிர்த்து, எப்போதும் ஈரப்பதத்துடன் வைத்திருக்க உதவுகிறது.

CTM முறையைத் தவறாமல் பின்பற்றுங்கள்.



சுத்தம் செய்தல், டோனிங் மற்றும் ஈரப்பதமாக்குதல் ஆகிய மூன்றும் தினசரி சருமப் பராமரிப்பின் அடித்தளமாகும். உறங்குவதற்கு முன் முகத்தைச் சுத்தப்படுத்தி, டோனர் மற்றும் மாய்ஸ்சரைசர் பயன்படுத்துவது சருமத்தைச் சீரமைக்க உதவும்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் இறந்த செல்களை நீக்குங்கள். சருமத்தின் மேல் அடுக்கில் சேரும் இறந்த செல்களை வாரம் ஒருமுறை 'எக்ஸ்ஃபோலியேட்' செய்வதன் மூலம் நீக்க வேண்டும். இது சருமம் கருமையாவதைத் தடுத்து, பொலிவைத் தரும். ஆனால், வாரத்திற்கு இரண்டு முறைக்கு மேல் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

சன்ஸ்கிரீன் பயன்படுத்துவது கட்டாயம். வானிலை எப்படி இருந்தாலும், SPF 30 மற்றும் PA+++ குறியீடு கொண்ட சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துங்கள். இது சூரியனின் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களிடமிருந்து உங்களைப் பாதுகாப்பதோடு, முன்கூட்டியே வயதான தோற்றம் ஏற்படுவதைத் தடுக்கும்.

சரியான மூலப்பொருட்களைத் தேர்ந்தெடுங்கள். 30 வயதிற்கு மேல் சருமத்தில் வயதான அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். எனவே, வைட்டமின் C, நியாசினமைடு, ரெட்டினால் மற்றும் செராமைடுகள் போன்ற சத்துக்கள் நிறைந்த சருமப் பராமரிப்புப் பொருட்களைப் பயன்படுத்துவது சிறந்தது.

சரியான ஊட்டச்சத்து மாத்திரைகள் முக்கியம். உடலின் நெகிழ்வுத்தன்மையைப் பேண வைட்டமின் மற்றும் கொலாஜன் சத்துக்களும் அவசியம். இருப்பினும், ஏதேனும் சப்ளிமெண்ட்ஸ் எடுப்பதற்கு முன் ஒரு மருத்துவர் அல்லது ஊட்டச்சத்து நிபுணரை அணுகுவது நல்லது.

ஃபேஷியல் மற்றும் ஃபேஸ் மாஸ்க்குகள் முகத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்க உதவும். சருமத்திற்குத் தேவையான கூடுதல் ஊட்டச்சத்தை அளிக்க, அவ்வப்போது ஃபேஷியல் மற்றும் முகமூடிகளைப் பயன்படுத்துங்கள். இது சருமத்திற்கு உடனடிப் பொலிவைத் தரும்.

## கண்களுக்குக் கீழே தடவும் க்ரீம்கள்

30 வயதில் கண்களுக்குக் கீழ் கருவளையங்கள் மற்றும் வீக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதற்கென பிரத்யேகமாக உள்ள அண்டர்-ஐ க்ரீம்களைப் பயன்படுத்துவது மென்மையான அந்தப் பகுதியை ஆரோக்கியமாக வைக்கும்.




உடல் முழுவதையும் கவனியுங்கள். அழகுப் பராமரிப்பு என்பது முகத்தோடு முடிந்து விடுவதில்லை. கழுத்து, கைகள் மற்றும் கால்களுக்கும் மாய்ஸ்சரைசர் மற்றும் லோஷன்களைப் பயன்படுத்துங்கள். குறிப்பாக, ஈரமான சருமத்தில் லோஷன் தடவுவது அதிகப் பலனைத் தரும்.

## கூந்தல் பராமரிப்புக்கான வழிகள்

தலைமுடிக்கு எண்ணெய் தேய்ப்பது நல்லது. தேங்காய் எண்ணெய் தலைமுடியின் வேர்க்கால்களில் ஊடுருவி, புரத இழப்பைத் தடுத்து முடியைப் பாதுகாக்கும். தலைமுடி சேதமடைவதைத் தவிர்க்கத் தவறாமல் எண்ணெய் தேயுங்கள்.

ஷாம்புவைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள். அதிகப்படியான ஷாம்பு முடியை வறட்சியாக்கும். ஷாம்புவை நேரடியாகப் பயன்படுத்தாமல், சிறிதளவு தண்ணீரில் கலந்து பயன்படுத்துங்கள். தினமும் தலை குளிப்பதையும் தவிர்க்கவும்.

கண்டிஷனரைச் சரியாகப் பயன்படுத்துங்கள். ஷாம்பு போட்ட பிறகு கண்டிஷனர் பயன்படுத்துவது முடியை மென்மையாக்கும். ஆனால், கண்டிஷனரை முடியின் வேர்களில் தடவாமல், முடியின் நீளத்திற்கு மட்டும் தடவுவதை உறுதிச் செய்யுங்கள்.

முறையான இடைவெளியில் முடியை வெட்டுங்கள். ஒவ்வொரு 6 முதல் 8 வாரங்களுக்கு ஒருமுறை முடியின் நுனிகளை வெட்டுவது, முடி பிளவுபடுவதைத் தடுத்து கூந்தலை ஆரோக்கியமாக வளரச் செய்யும்.

அடிக்கடி வண்ணம் பூசுவதைத் தவிர்க்கவும். முடிக்கு வண்ணம் பூசும் சாயங்களில் உள்ள இரசாயனங்கள் கூந்தலைச் சேதப்படுத்தும். தவிர்க்க முடியாத பட்சத்தில், அம்மோனியா இல்லாத தரமான சாயங்களைப் பயன்படுத்துங்கள்.

ஹேர் டிரையர் பயன்பாட்டைக் குறைக்கவும். முடி காய்வதற்கு இயற்கையான காற்றையே அதிகம் பயன்படுத்துங்கள். ஹேர் டிரையரை அடிக்கடி பயன்படுத்துவது கூந்தலை வறண்டு போகச் செய்யும். அவசரத் தேவைக்கு மட்டும் இதனைப் பயன்படுத்துங்கள்.







# விளாம்பழம்: இயற்கையின் அரிய கொடை

**விளாம்பழம் என்பது மருத்துவக் குணங்களும், ஆன்மீகப் பெருமைகளும் நிறைந்த, தெற்காசியாவிற்குரிய ஒரு பாரம்பரியமான பழமாகும். கடினமான ஓட்டிற்குள் சுவையான சதைப் பகுதியைக் கொண்ட இப்பழம், "ஏழைகளின் ஆப்பிள்" என்றும் அழைக்கப்படுகிறது. இது பார்ப்பதற்கு சிறிய தேங்காய் வடிவில், சாம்பல் அல்லது பழுப்பு நிறத்தில், மரக்கட்டை போன்ற மிகக் கடினமான வெளிப்புற ஓட்டுடன் இருக்கும். இந்த ஓட்டை உடைத்தால், உள்ளே கரும் பழுப்பு நிறத்தில் பிசுபிசுப்பான சதைப் பகுதியும், சிறிய வெள்ளை நிற விதைகளும் நிறைந்திருக்கும். விளா மரம் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய ஒரு நடுத்தர வகை மரமாகும், இதன் இலைகள் நறுமணமிக்கவை.**

இதன் சதைப் பகுதி ஒரு தனித்துவமான புளிப்பும் இனிப்பும் கலந்த சுவையைக் கொண்டது. நன்கு பழுத்த பழம் நல்ல நறுமணத்துடன் இருக்கும். இதன் சதைப் பகுதியுடன் வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்துப் பிசைந்து சாப்பிடுவது பாரம்பரியமான வழக்கமாகும். சிலர் இதனுடன் உப்பு மற்றும் மிளகாய்த் தூள் சேர்த்தும் சுவைப்பார்கள். ஜாம், சட்னி மற்றும் பானங்கள் தயாரிக்கவும் இது பயன்படுகிறது.






விளாம்பழம் வெறும் சுவைக்காக மட்டுமின்றி, ஒரு சிறந்த இயற்கை மருந்தாகவும் செயல்படுகிறது. இதில் அதிகப்படியான நார்ச்சத்து உள்ளதால், மலச்சிக்கல், அஜீரணம் மற்றும் குடல் புண்களை குணமாக்க உதவுகிறது. கோடைக் காலத்தில் உடலின் வெப்பத்தைத் தணித்து, குளிர்ச்சியூட்ட இப்பழத்தின் பானம் பெரிதும் உதவுகிறது.

இரத்தத்தில் உள்ள நச்சுக்களை நீக்கி, இரத்த ஓட்டத்தைச் சீராக்கவும், சிறுநீரகப் பாதையில் ஏற்படும் தொற்றுகளை நீக்கி அதன் செயல்பாட்டை மேம்படுத்தவும் இது துணை புரிகிறது. மேலும், இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் இதயத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

தமிழர் பண்பாட்டிலும் வழிபாட்டிலும் விளாம்பழத்திற்கு முக்கிய இடமுண்டு. குறிப்பாக, விநாயகர் சதுர்த்தி வழிபாட்டில் விநாயகருக்குப் படைக்கப்படும் முக்கியப் பழங்களில் இதுவும் ஒன்றாகும். "விநாயகர் விளாம்பழத்தை விரும்பி உண்பவர்" என்ற ஆன்மீக நம்பிக்கையும் இதற்கு ஒரு காரணமாகும்.

இன்றைய நவீன காலகட்டத்தில் துரித உணவுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை, இது போன்ற பாரம்பரிய பழங்களுக்கு நாம் கொடுப்பதில்லை. முன்பு மலேசியாவில் பல தோட்டங்களில் இந்த விளாம்பழ மரங்கள் பரவலாக இருந்தன; ஆனால் காலப்போக்கில் நகரமயமாக்கல் மற்றும் பயிர் மாற்றங்கள் காரணமாக இவை அழிந்து, இன்றைய தலைமுறையினரில் பலருக்கும் இப்பழத்தைப் பற்றித் தெரியாமல் போய் விட்டது.

எனவே, நம் முன்னோர்கள் வளர்த்த இத்தகைய அரிய மரங்களைப் பாதுகாத்து, மீண்டும் நம் வீட்டுத் தோட்டங்களிலும், பொது இடங்களிலும் நட்டு வளர்ப்பதன் மூலமே, இதன் மருத்துவக் குணங்களையும் நன்மைகளையும் நம் எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டுச் சேர்க்க முடியும்.





## திரைக்கடல் தாண்டிய தமிழ் சினிமா:

# ஷா பிரதர்ஸை எதிர்த்து நின்ற வி.டி.ராஜன் கம்பனியின் வீரம்



**மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்த் திரைப்படங்களுக்கு எப்போதும் பெரும் வரவேற்பு உண்டு. இன்று பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் திரைப்பட விநியோகத்தை டிஜிட்டல் முறையில் கையாள்வதற்கு முன்பாகவே, 1970 மற்றும் 80-களில் தியேட்டர்களுக்குப் பெட்டிப் பெட்டியாக ஃபிலிம் சுருள்களைக் கொண்டுச் சேர்த்து, தமிழ் சினிமாவை அங்கு வாழும் தமிழ் மக்களிடம் கொண்டுச் சேர்த்த பெருமை சில தனியாரையே சாரும். அதில் மிக முக்கியமான, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பெயர் வி.டி.ராஜன் கம்பனி ஆகும்.**




வி.டி.ராஜன் நிறுவனம் தனது முதன்மைத் தலைமையகத்தைச் சிங்கப்பூரில் அமைத்திருந்தது. அப்போதைய காலகட்டத்தில் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய இரு நாடுகளின் விநியோகச் சந்தையும் ஒன்றுக்கொன்று பிணைந்தே இருந்தன. சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டு, தமிழ்நாட்டில் இருந்து புதிய திரைப்படங்களின் உரிமைகளை வாங்கி, அவற்றை மலேசியாவில் உள்ள நூற்றுக்கணக்கான திரையரங்குகளுக்கு விநியோகம் செய்து விற்பனை செய்வதில் வி.டி.ராஜன் நிறுவனம் கொடி கட்டிப் பறந்தது.

எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், மற்றும் ஜெய்சங்கர் போன்ற முன்னணி நடிகர்களின் படங்கள் மட்டுமின்றி, பக்தி மற்றும் குடும்பக் கதையம்சம் கொண்ட திரைப்படங்களை மலேசியத் தமிழர்களிடம் கொண்டுச் சேர்த்த பெருமை வி.டி.ராஜனுக்கு உண்டு. இந்த நிறுவனம் தருவித்த படங்களில் சில எக்காலத்துக்கும் அழியாத காவியங்களாக மாறின.




கே.ஆர்.விஜயா நடிப்பில் 1972-இல் உருவான 'தெய்வம்' திரைப்படத்தின் பாடல்களும், முருகனின் பெருமைகளும் மலேசியத் தமிழ் மக்களிடையே பக்திப் பரவசத்தை ஏற்படுத்தி, வி.டி.ராஜன் கம்பனிக்கு ஒரு மிகப் பெரிய வணிக வெற்றியாக அமைந்தது. தொடர்ந்து 1974-இல் நாக வழிபாட்டை மையமாகக் கொண்டு வெளிவந்த 'வெள்ளிக்கிழமை விரதம்' திரைப்படம் மலேசியாவில் வாரக் கணக்கில் தியேட்டர்களில் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடி சாதனைப் படைத்தது.

அதே போல, 1975-இல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இரு வேடங்களில் நடித்து அசத்திய 'நினைத்ததை முடிப்பவன்' திரைப்படம் மலேசியாவில் தியேட்டர்களைத் திருவிழாக்கோலமாக மாற்றியதுடன், எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர்களைக் குறிவைத்து இப்படத்தை விநியோகம் செய்ததன் மூலம் இந்நிறுவனம் பெரும் லாபம் ஈட்டியது.

இவற்றுடன், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பில் உருவான காவியமான 'தங்கப்பதக்கம்' (1974) திரைப்படத்தையும் மலேசியாவில் வி.டி.ராஜன் கம்பனியே விநியோகம் செய்தது. நேர்மையான போலீஸ் அதிகாரியின் கதையை உணர்ச்சிப்பூர்வமாக விவரித்த இத்திரைப்படம், மலேசியத் தமிழர்களிடையே மாபெரும் வரவேற்பைப் பெற்று இந்நிறுவனத்திற்கு மற்றொரு மகுடமாக அமைந்தது.

அக்காலத்தில் எம்.ஜி.ஆர். படங்களை வாங்குவதில் முன்னணி கார்ப்பரேட் நிறுவனமாக விளங்கிய 'ஷா பிரதர்ஸ்' (Shaw Brothers) மற்றும் பிற்காலத்தில் மாபெரும் விநியோக சக்தியாக உருவெடுத்த 'கொலம்பியா ஃபிலிம்ஸ்' (Columbia Films) போன்ற நிறுவனங்களுக்கு வி.டி.ராஜன் கம்பனியால் பெரிய அளவில் போட்டி கொடுக்க முடியவில்லை என்றாலும், திரைப்பட விநியோகத்தில் அந்த கம்பெனி தனது தனித்துவமான பாணியில் மிக முக்கியப் பங்காற்றியது. 'ஷா பிரதர்ஸ்' போன்ற ஜாம்பவான்கள் பிரமாண்டமான படங்களைக் கைப்பற்றிய போது, வி.டி.ராஜன் நிறுவனம் பக்தித் திரைப்படங்கள், குடும்பக் கதைகள் மற்றும் 'தங்கப்பதக்கம்' போன்ற உணர்வுப்பூர்வமான கிளாசிக் படங்களைத் தேர்ந்தெடுத்து விநியோகம் செய்ததன் மூலம் தனக்கென ஒரு நிலையானச் சந்தையையும் ரசிகர் பட்டாளத்தையும் உருவாக்கியிருந்தது.


மேலும், இதே காலகட்டத்தில் 'தங்கமலர் ஏவி' (Thangamalar AV) மற்றும் பிற்காலத்தில் வந்த 'சுவரா பிக்சர்ஸ்' (Suara Pictures) போன்ற பல உள்ளூர் நிறுவனங்கள் தமிழ் சினிமா விநியோகக் களத்தில் தீவிரமாகச் செயல்பட்ட போதிலும், சிங்கப்பூர்-மலேசியா ஆகிய இரு எல்லைகளையும் இணைக்கும் பாலமாக வி.டி.ராஜன் கம்பனி ஆற்றிய பங்கு வரலாற்றில் தனித்துவமானது.




அக்காலத்தில் இன்று போல இணையமோ, சாட்டிலைட் வசதியோ கிடையாது. தமிழ்நாட்டில் படம் வெளியாகி சில வாரங்கள் அல்லது மாதங்கள் கழித்தே மலேசியாவுக்கு ஃபிலிம் பெட்டிகள் கப்பல் அல்லது விமானம் மூலம் கொண்டு வரப்படும். அவ்வாறு வரும் படங்களை மலேசியாவில் உள்ள பிரசித்தி பெற்ற திரையரங்குகளுக்கு விநியோகிப்பதில் வி.டி.ராஜன் கம்பனி மிகச் சிறந்த வணிக உத்திகளைக் கையாண்டது.

மலேசிய, சிங்கப்பூர் தமிழ் சினிமா வரலாற்றை எழுதும் போது தியேட்டர் அதிபர்கள் மற்றும் விநியோகஸ்தர்களின் பங்களிப்பைத் தவிர்க்க முடியாது. அந்த வகையில், தமிழகத் திரையுலகின் ஆகச் சிறந்த படைப்புகளைத் தேர்ந்தெடுத்து, கடல் கடந்து வாழும் தமிழ் மக்களுக்குத் திரை விருந்தாகப் படைத்த வி.டி.ராஜன் கம்பனி, மலேசிய-சிங்கப்பூர் தமிழ் சினிமா விநியோகத் துறையின் முன்னோடி என்று கூறினால் அது மிகையாகாது.






# நெருப்பாய் மீளுமா சிப்பாங்?

## மலேசிய பொருளாதாரத்தின் புதிய அனல் பறக்கும் உந்துசக்தி

மலேசியா 1999 முதல் 2017 வரை சிப்பாங் அனைத்துலகச் சுற்றுக்களத்தில் (SIC) F1 பந்தயங்களை வெற்றிகரமாக நடத்தியது. அதிக செலவு காரணமாக இது நிறுத்தப்பட்டாலும், தற்போது F1 உலகளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மலேசியாவில் F1 பந்தயத்தை மீண்டும் கொண்டு வருவது, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும் ஒரு முக்கிய உந்தும் சக்தியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. F1 நடத்தப்படுவதால் பொருளாதார ரீதியாக மலேசியா எத்தகைய நன்மையை அடையும் என்பது குறித்து ஒரு கண்ணோட்டமிடுவோம்.

### சுற்றுலா வருவாய் உயரும்

F1 பந்தயம் உலகெங்கிலும் உள்ள லட்சக்கணக்கான ரசிகர்களை ஈர்க்கும் ஒரு நிகழ்வு ஆகும். இது மலேசியாவிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை பெருமளவில் உயர்த்தும்.

### விடுதி, உணவு, போக்குவரத்து வருவாய் இரட்டிப்பு

பந்தய வார இறுதியில் கோலாலம்பூர் மற்றும் சிப்பாங் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விடுதிகள் முழுமையாக நிரம்பும். இதனால் தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்துத் துறைகளின் வருவாய் இரட்டிப்பாகும்.

### உலகளவில் மலேசியா - பிராண்ட் வால்யூ அதிகரிக்கும்

F1 பந்தயங்கள் உலகளவில் பில்லியன் கணக்கான மக்களால் நேரலையாகப் பார்க்கப்படுகின்றன. இது மலேசியாவை ஒரு முதன்மையான சுற்றுலா மற்றும் வணிக மையமாக உலகிற்கு மீண்டும் பறைசாற்றும்.

### வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வணிக வாய்ப்புகள் அதிகரிக்கும்

பந்தயத்தின் போது உலகின் முன்னணி நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் மலேசியா வருவார்கள். இது புதிய அனைத்துலக வணிக ஒப்பந்தங்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு வழிவகுக்கும்.

### ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கம்

பந்தயக் களம் பராமரிப்பு, பாதுகாப்பு, நிகழ்வு மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான தற்காலிக மற்றும் நிரந்தர வேலை வாய்ப்புகள் உருவாகும்.

### உள்ளூர் வணிகங்களுக்கு பெரும் ஆதாயம்

பந்தயக் களத்திற்கு வெளியே உள்ளூர் கைவினைப் பொருட்கள், உணவு வணிகர்கள் மற்றும் சிறு வணிகர்கள் தங்கள் தயாரிப்புகளை அனைத்துலகச் சந்தையில் விற்க நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

### தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கு ஊக்கம்

F1 என்பது வெறும் பந்தயம் மட்டுமல்ல, அது அதிநவீன தொழில்நுட்பங்களின் களம். இது மலேசியாவின் வாகனத் துறை மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறியும் வாய்ப்பை வழங்கும்.

### பெட்ரோனாஸ் பிராண்ட் மதிப்பு மேலும் உயரும்

மலேசியாவின் தேசிய எண்ணெய் நிறுவனமான பெட்ரோனாஸ் ஏற்கனவே F1 இல் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது. உள்நாட்டில் பந்தயம் நடப்பது அதன் வணிக மதிப்பை மேலும் உயர்த்தும்.

### உள்கட்டமைப்பு மேம்பாடு - நீண்ட கால நன்மை

பந்தயத்தை முன்னிட்டு விமான நிலையங்கள், பொதுப் போக்குவரத்து மற்றும் சாலை வசதிகள் மேம்படுத்தப்படும். இது நீண்ட காலத்திற்கு நாட்டின் உள்கட்டமைப்பிற்குப் பயனளிக்கு


நவீன உலகத்தரம் வாய்ந்த தளம்


உலகின் சிறந்த பந்தய அனுபவம்



சர்வதேச கவனத்தை ஈர்க்கும் மேடை



உலக தர வசதிகள் & படாக் கிளப் அனுபவம்


மலேசியா - உலகின் இதயத்துடிக்கு மீண்டும் வருக!



சிப்பாங் டார்ரச் சாலைகளில் மீண்டும் F1 எந்திரங்களின் கர்ஜனை ஒலித்தால், மலேசிய பொருளாதாரத்தன் என்ஜினுக்கு அதிவேக எரிபொருளை ஊட்டுவதாய் அமையும்! ஆரம்பக் கட்ட முதலீடுகள் அலை பறக்கும் பட்ஜெட்டைக் கோரினாலும், அனைத்துலக முதலீடுகள், சற்றுலாப் பயணிகளின் பெருக்கம் மற்றும் வேலை வாய்ப்பு அலை என பில்லியன் கணக்கிலான வருவாய் மலேசியாவை நோக்கிழ் பாயும். அண்டை நாடுகளின் போட்டிகளைத் தகர்த்து, உலகளாவிய பொருளாதாரப் பந்தயத்தில் மலேசியாவை மீண்டும் முதலிடத்திற்கு ஏற்றி விடும் ஒரு **'சூப்பர் சார்ஜர்' உந்துசக்தியாக** இந்த மீள்வருகை அமையும் என்பதில் ஐயமில்லை!



# மலேசியாவின் ஆன்மா:
# சுட்டி சுட்டி மலேசியா

சுற்றுலா என்பது வெறும் புதிய இடங்களைக் காண்பதும், புகைப்படங்கள் எடுப்பதும் மட்டுமல்ல; அது ஒரு நாட்டின் ஆன்மாவைத் தொட்டு உணரும் பயணமாகும். மலேசிய சுற்றுலாத்துறையின் 'சுட்டி சுட்டி மலேசியா' (Cuti-Cuti Malaysia) என்ற முழக்கம், வெறும் விளம்பர வாசகம் அல்ல. அது மலேசியர்களின் பன்முகத்தன்மையையும், கொட்டிக் கிடக்கும் இயற்கை வளங்களையும் அன்றாட வாழ்வில் கொண்டாடுவதற்கான ஓர் உன்னதமான வாழ்வியல் முறையாகும். "நாட்டை நேசிப்போம், உள்நாட்டுச் சுற்றுலாவை ஆதரிப்போம்" என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு மலேசியரின் மனதிலும் ஒளிர வேண்டிய தருணம் இது.




மலேசியா என்பது மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள் மற்றும் கடசான்-டுசுன், இபான் போன்ற பூர்வகுடி மக்கள் இணைந்து வாழும் ஒரு வண்ணமயமான பூந்தோட்டமாகும். ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பயணிக்கும் போது, மக்கள் மாற்று சமூகத்தவரின் பாரம்பரிய உணவுகள், திருவிழாக்கள் மற்றும் வாழ்வியல் முறைகளை நேரில் காண்கின்றனர்.


மலாக்காவின் வரலாற்றுச் சுவடுகளையோ, பினாங்கின் பழைமையான தெருக்களையோ அல்லது சபாவின் கலாச்சாரக் கிராமங்களையோ பார்வையிடும் போது, மலேசியர்கள் தங்களுக்குள் இருக்கும் வேற்றுமையில் ஒற்றுமையை உணர்கிறார்கள். உள்நாட்டுப் பயணம் என்பது வெவ்வேறு இன மக்களின் கலாச்சார சிறப்புகளை மதிக்கக் கற்றுக் கொடுத்து, தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் ஒரு திறந்தவெளிப் பள்ளியாகச் செயல்படுகிறது.

மலேசியா உலகிலேயே மிக அதிக பல்லுயிர் பெருக்கம் கொண்ட நாடுகளுள் ஒன்றாகும். நமது நாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை முதலில் ஆராய்வது நமது வாழ்வின் ஓர் அங்கமாக மாற வேண்டும்.











உலகின் பழமையான மழைக்காடான தாமான் நெகாரா மற்றும் சரவாக்கின் முலு குகைகள் நம் நாட்டில் இருக்கும் போது, நாம் ஏன் அமேசான் காடுகளைத் தேடி ஓட வேண்டும்? பவளப் பாறைகளும், தூய்மையான நீலக் கடலும் கொண்ட ரெடாங், தியோமான் மற்றும் சிப்பாடான் தீவுகள் உலகத் தரம் வாய்ந்தவை.

கேமரன் மலை மற்றும் கெந்திங் மலையின் குளிர்ச்சியான சூழல், நம் நாட்டின் புவியியல் பன்முகத்தன்மைக்குச் சான்றாகும். இந்த இயற்கை வளங்களை ரசிப்பது, நமது நாட்டின் மீதான காதலை இன்னும் அதிகமாக்குகிறது.

"சுட்டி சுட்டி மலேசியா" என்ற சிந்தனையை நம் வாழ்வில் பின்பற்றுவது, நாட்டின் மீது நாம் காட்டும் உண்மையான தேசப்பற்றாகும். நாம் மலேசியாவிற்குள் செலவழிக்கும் ஒவ்வொரு ரிங்கிட்டும், உள்ளூர் சிறு வணிகர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள், பாரம்பரியக் கைவினைஞர்கள் மற்றும் வாடகை வாகன ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துகிறது.

வெளிநாட்டுப் பயணங்களுக்காக நமது நாட்டின் பணம் வெளியேறுவதைத் தடுத்து, நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை இது வலுப்படுத்துகிறது. நமது குழந்தைகளுக்கு முதலில் சொந்த நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும், இயற்கை வளங்களையும் சுற்றிக் காட்டுவதன் மூலம், அவர்களுக்குள் சிறுவயதிலேயே தாய்நாட்டின் மீதான பெருமிதத்தையும்



நேசத்தையும் விதைக்க முடியும்.

சுருக்கமாகக் கூறின், 'சுட்டி சுட்டி மலேசியா' என்பது நம் நாட்டின் அழகை முதலில் ஆராய்ந்து மகிழும் ஓர் உன்னதப் பழக்கமாகும். வெளிநாட்டுக் கனவுகளைத் துரத்துவதற்கு முன்பு, நமது சொந்த மண்ணில் இருக்கும் அதிசயங்களையும், கலாச்சாரத்தையும் நாம் முழுமையாகக் கொண்டாட வேண்டும். "நாட்டை நேசிப்போம், உள்நாட்டுச் சுற்றுலாவை ஆதரிப்போம்" என்ற எண்ணத்தை வெறும் பேச்சோடு நிறுத்தாமல், நமது அடுத்த விடுமுறைப் பயணமாக மாற்றுவோம். மலேசியாவைக் கொண்டாடுவோம்!




Published by: Eye Mag Publication Sdn Bhd (1397097-V) No 73-2, Jalan Prima SG 3, Prima Sri Gombak, 68100 Batu Caves, Selangor, Tel: 03-61811414
Email: Admin@thisaigalnews.com Printed by Twinstar Synergy Sdn Bhd (987235X) Lot 2A, Jalan 13/2A, 46200 Petaling Jaya, Selangor.